## அத்தியாயம் 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்தி மற்றும் கொள்கைகள்

### 5.1 பொதுநோக்கு

- **இலங்கையின் வெளிநாட்டுத்துறை 2005இல் பல்தரப்பட்ட பாரிய அறைகூவல்களை எதிர் கொண்ட போதும் வெளிநாட்டு வர்த்தகத்திலும் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளிலும் கணிச மானளவு விரிவாக்கத்தை எய்தி 2005 இன் சென்மதி நிலுவையில் மிகை ஒன்றிற்கு வழிவகுத்தது. இதற்கு செழிப்பான உலகளாவிய பொருளாதார வளர்ச்சியும் தொழில் முயற்சியாளர்களதும் அரசாங்கத்தினதும் இணைந்த முயற்சிகளுமே பெருமளவு காரணமாகும்.** உறுதியான உலகப் பொருளாதார வளர்ச்சியுடன் குறிப்பாக பிரதான ஏற்றுமதி நாடுகளிலான வளர்ச்சியுடன் உற்பத்திகளின் உயர் தரத்தின் முக்கிய காரணமாக இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு இலங்கையின் ஏற்றுமதி நாடுகளில் தொடர்ச்சியான கேள்வி காணப்பட்டது. பன்னாட்டு போட்டிகளுக்கு ஆயத்தமாக இருக்கும் விதத்தில் தொழில் முயற்சியாளர்களினால் முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மூலம் பல்நூலிழை ஏற்பாட்டின் முடிவுறுத் தலினால் தோற்றுவிக்கப்பட்ட அறை கூவல்களை வெளிநாட்டுத்துறை வெற்றிகரமாக எதிர் கொண்டது. வர்த்தக இராஜதந்திரம் மூலமான சந்தை நுழைவு மேம்படுத்தல் தொடர்பான அரசின் முயற்சிகள் ஊடாக முயற்சியாளர்களது முயற்சிக்கு வசதிகள் வழங்கப்பட்டன. அதிகரித்த வருவாய்கள் மற்றும் உயர்ந்தளவிலான எண்ணெய் விலைகளின் ஒரு பகுதியை உள்நாட்டுப் பொருளாதாரம் மீது சுமத்தக்கூடியதாக விருந்தமை காரணமாக இத்துறையானது வலு விலைகளின் அசைவுகளினால் ஏற்பட்ட தாக்கத்தைச் சமாளித்து வெளிநாட்டுப் போட்டித் தன்மையினைப் பேணக்கூடியதாகவிருந்தது. சுற்றுலாப் பயணத்துறை குறைந்தளவில் மெதுவடைந்ததெனினும் பணஅனுப்புதல்கள், சுனாமியுடன் தொடர்புடைய மீள்கட்டுமான நிதிஉட்பாய்ச்சல் தொடர்பான கொடை, கடன்கொடுப்பனவுகளைப் பிற்போடுவதற்கான சட்ட இசைவு மற்றும் அரசிற்கான கடன்கள் மற்றும் கொடைகள் என்பவற்றின் மூலமான சுனாமியுடன் தொடர்புடைய மீள்கட்டுமான நிதி உட்பாய்ச்சல்களின் அதிகரிப்பானது இறக்குமதிகளின் நிதியிடல் மீதான வெளிப் பாய்ச்சல்களின் அதிகரிப்பினை எதிரீடு செய்தது. இவை 2005 இல் சென்மதிநிலுவையில் மிகையொன்றினை ஏற்படுத்தியதுடன் கடன் தீர்ப்பனவு இயலளவையும் அதிகரித்தது. நாட்டின் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை மேலும் பலப்படுத்து முகமாக வெளிநாட்டு ஒதுக்கீடுகள் வசதியானதொரு நிலைக்கு மேம்பட்டன. பிரதான நாணயங் களுக்கெதிராக ரூபாய் மிதமான மதிப்பில் உயர்வடைந்த போதும், வெளிநாட்டுப் போட்டித் தன்மையில் இது பாரியள விலானதொரு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

வடைபடம் 5.1
வெளிநாட்டு வர்த்தகம்

**இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி**




**ஏற்றுமதி இறக்குமதி அளவுச்சுட்டெண்கள்**

(1997=100)




**இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் வர்த்தக மாற்று வீதமும் அலகுப்பெறுமதிச்சுட்டெண்ணும்**

1997=100)



## அட்டவணை 5.1
## சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை(அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002 | 2003 | 2004 | 2005(ஆ) | 2001 | 2002 | 2003 | 2004 | 2005(ஆ) |
| வர்த்தக நிலுவை | -1,157 | -1,406 | -1,539 | -2,243 | -2,516 | -102,592 | -134,706 | -148,324 | -227,171 | -253,082 |
| ஏற்றுமதிகள் | 4,817 | 4,699 | 5,133 | 5,757 | 6,347 | 430,372 | 449,855 | 495,426 | 583,967 | 638,276 |
| இறக்குமதிகள் | 5,974 | 6,106 | 6,672 | 8,000 | 8,863 | 532,964 | 584,561 | 643,750 | 811,138 | 891,359 |
| பணிகள்: (தேறிய) (இ) | 204 | 295 | 399 | 419 | 338 | 14,692 | 28,224 | 38,443 | 42,735 | 34,043 |
| பெறுகைகள் | 1,355 | 1,268 | 1,411 | 1,527 | 1,540 | 120,937 | 121,340 | 136,123 | 154,746 | 154,877 |
| கொடுப்பனவுகள் | 1,151 | 974 | 1,012 | 1,108 | 1,202 | 106,246 | 93,115 | 97,680 | 112,011 | 120,833 |
| வருமானம் (தேறிய) | -267 | -252 | -172 | -204 | -299 | -23,842 | -24,167 | -16,535 | -20,732 | -30,049 |
| மீளப் பெறுகைகள் | 108 | 75 | 170 | 157 | 35 | 9,584 | 7,201 | 16,385 | 15,813 | 3,629 |
| கொடுப்பனவுகள் | 375 | 328 | 341 | 360 | 335 | 33,425 | 31,368 | 32,920 | 36,545 | 33,678 |
| பொருட்கள், பணிகள் மற்றும் வருமானம் (தேறிய) | -1,220 | -1,364 | -1,312 | -2,028 | -2,478 | -111,742 | -130,648 | -126,416 | -205,168 | -249,088 |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 984 | 1,097 | 1,205 | 1,350 | 1,736 | 87,837 | 104,980 | 116,350 | 136,672 | 174,542 |
| பெறுகைகள் | 1,155 | 1,287 | 1,414 | 1,564 | 1,968 | 103,180 | 123,183 | 136,475 | 158,291 | 197,968 |
| கொடுப்பனவுகள் | 172 | 190 | 209 | 214 | 233 | 15,343 | 18,202 | 20,125 | 21,619 | 23,426 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 22 | 31 | 36 | 30 | 93 | 1,925 | 2,982 | 3,441 | 3,038 | 9,300 |
| நடைமுறைக் கணக்கு | -215 | -236 | -71 | -648 | -650 | -21,980 | -22,686 | -6,625 | -65,458 | -65,246 |
| மூலதன, நிதியியல் கணக்குகள் | 562 | 444 | 722 | 631 | 1,224 | 49,077 | 40,639 | 69,723 | 61,588 | 123,866 |
| மூலதனக் கணக்கு | 198 | 65 | 74 | 64 | 250 | 17,766 | 6,219 | 7,146 | 6,573 | 25,108 |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) (ஈ) | 198 | 65 | 74 | 64 | 250 | 17,766 | 6,219 | 7,146 | 6,573 | 25,108 |
| பெறுகைகள் | 203 | 71 | 81 | 71 | 257 | 18,241 | 6,782 | 7,768 | 7,242 | 25,863 |
| கொடுப்பனவுகள் | 5 | 6 | 6 | 7 | 7 | 475 | 563 | 622 | 669 | 755 |
| நிதியியல் கணக்குகள் | 364 | 379 | 648 | 567 | 974 | 31,311 | 34,420 | 62,577 | 55,015 | 98,757 |
| நீண்டகாலம் | 163 | 326 | 722 | 680 | 798 | 14,337 | 28,911 | 69,721 | 69,255 | 80,391 |
| நேரடி முதலீடுகள் (தேறிய) | 172 | 185 | 201 | 227 | 234 | 15,271 | 17,716 | 19,450 | 22,826 | 23,505 |
| வெளிநாட்டு நேரடிமுதலீடு(தேறிய) | 82 | 181 | 171 | 217 | 234 | 7,310 | 17,281 | 16,557 | 21,948 | 23,505 |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | 90 | 5 | 30 | 10 | 0 | 7,961 | 435 | 2,893 | 878 | - |
| தனியார் நீண்டகாலம் (தேறிய) | -257 | -21 | -33 | 14 | 11 | -22,918 | -2,039 | -3,201 | 1,720 | 1,054 |
| உட்பாய்ச்சல் | 44 | 115 | 101 | 169 | 197 | 4,016 | 11,007 | 9,738 | 17,395 | 19,739 |
| வெளிப்பாய்ச்சல் (ஈ) | 301 | 136 | 134 | 155 | 186 | 26,934 | 13,046 | 12,939 | 15,675 | 18,685 |
| அரச நீண்டகாலம் (தேறிய) | 249 | 162 | 554 | 439 | 553 | 21,984 | 13,233 | 53,472 | 44,709 | 55,832 |
| உட்பாய்ச்சல் | 575 | 542 | 913 | 771 | 747 | 51,193 | 51,843 | 88,106 | 78,299 | 75,309 |
| வெளிப்பாய்ச்சல் | 326 | 380 | 359 | 331 | 194 | 29,209 | 38,610 | 34,634 | 33,590 | 19,477 |
| குறுங்காலம் | 201 | 53 | -75 | -112 | 176 | 16,974 | 5,509 | -7,145 | -14,240 | 18,366 |
| பட்டியலிடப்பட்டமுதலீடுகள்(தேறிய) | -11 | 25 | 2 | 11 | 60 | -1,025 | 2,443 | 209 | 1,109 | 6,103 |
| தனியார் குறுங்கால (தேறிய) | -42 | 68 | 19 | 28 | 16 | -3,798 | 6,548 | 1,877 | 2,514 | 1,640 |
| வர்த்தக வங்கிச் சொத்துக்கள் (தேறிய) | 183 | 104 | -94 | -354 | -223 | 2,867 | 6,893 | -9,090 | -45,367 | -19,669 |
| வர்த்தக வங்கிப் பொறுப்புக்கள்(தேறிய) | 71 | -145 | -2 | 202 | 323 | 18,929 | -10,375 | -141 | 27,504 | 30,292 |
| அரச குறுங்கால (தேறிய) | - | - | - | - | - | - | - | - | - | - |
| சிஎஉ ஒதுக்கீடுகள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| பெறுமதி சீராக்கம் | - | 93 | - | - | - | 22,245 | 8,900 | - | - | - |
| பிழைகளும் தவறுகளும் | -127 | 38 | -148 | -189 | -72 | -19,578 | 9,197 | -14,487 | -3,604 | -10,494 |
| **திரண்ட நிலுவை(உ)** | **220** | **338** | **502** | **-205** | **501** | **29,765** | **36,051** | **48,610** | **-7,474** | **48,125** |
| நாணய அசைவுகள்(உ) | -220 | -338 | -502 | 205 | -501 | -29,765 | -36,051 | -48,610 | 7,474 | -48,125 |
| ஆண்டுச் சராசரி செலாவணி வீதங்கள் ரூபா/ஐ.அ.டொ. | | | | | | 89.36 | 95.66 | 96.52 | 101.19 | 100.50 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விகிதம் சதவீதத்தில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | -7.4 | -8.5 | -8.4 | -11.2 | -10.7 | -7.3 | -8.5 | -8.4 | -11.2 | -10.7 |
| நடைமுறைக் கணக்கு | -1.4 | -1.4 | -0.4 | -3.2 | -2.8 | -1.6 | -1.4 | -0.4 | -3.2 | -2.8 |
| கொடைகளற்ற நடைமுறைக்கணக்கு | -1.5 | -1.6 | -0.6 | -3.4 | -3.2 | -1.7 | -1.6 | -0.6 | -3.4 | -3.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விபரம் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993)சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994இலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளன.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) 2001இல் பணிப் பெறுகைகள், 2001 யூலையில் வானூர்தி நிலைய தாக்குதலின்போது அழிக்கப்பட்ட வானூர்திகளுக்காக காப்புறுதிக் கட்டணமாக சிறிலங்கன் ஏயர்லைன்சினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 382.4 மில்லியனையும் உள்ளடக்குகின்ற வேளையில் 2001ஆம் ஆண்டின் பணிக்கொடுப்பனவுகள் வானூர்தி வாடகைக் காரருக்குச் செலுத்தப்பட்ட ஐ.அ.டொலர் 292.8 மில்லியனை உள்ளடக்குகிறது. இக் காப்புறுதிக் கோரல்களின் தேறிய பெறுகைகள் ஐ.அ.டொலர் 89.6 மில்லியனாக இருந்தன.

(ஈ) தனியார் மூலதன வெளிப்பாய்ச்சலின் கீழான தொழில்நுட்பக் கடன் தீர்ப்பனவு தொடர்பான ஐ.அ.டொலர் 147.6 மில்லியனையும் 2001 யூலையில் வானூர்நிலைய தாக்குதலின்போது அழிக்கப்பட்ட வானூர்தியின் எஞ்சிய மூலதனத்துக்கான 2001இன் மூலதனமாற்றல் பெறுகைகளின் கீழான தொடர்பான சீராக்கங்களையும் உள்ளடக்குகிறது.

(உ) நாணயத் துறையிலான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதிச் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

- **2005 இல் ஏற்றுமதிகள் 10.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து இறக்குமதிகள் 10.8 சதவீதத்தனால் வளர்ச்சியடைந்ததன் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது. பண அனுப்புதல்களில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டதன் பயனாக நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை சிறிதளவு மாத்திரம் வீழ்ச்சியடைந்தது.** உலகளாவிய கேள்வியின் விரிவாக்கம் மற்றும் நிரம்பலிலான முன்னேற்றங்கள் காரணமாக ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர்கள் 6,347 மில்லியன்களை எய்தியது. ஏற்றுமதி அளவு 6.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் விலைகள் 3.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதி ஐ.அ.டொலர் 8,863 மில்லியனுக்கு வளர்ச்சியுற்று அளவுகளில் 2.7 சதவீதமானதொருவளர்ச்சியையும் 7.8 சதவீத விலை அதிகரிப்பையும் பிரதிபலித்தது. நுகர்வுப் பொருட்களின் வளர்ச்சி (0.9 சதவீதம்) குறைவாக விருந்தமை மிதமான அளவு வளர்ச்சிக்கு காரணமாகவிருந்தது. உயர்ந்த வளர்ச்சி இடைநிலைப் பொருட்கள் (2.7 சதவீதம்) மற்றும் முதலீட்டுப் பொருட்களில் (4.2 சதவீதம்) காணப்பட்டது. பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்வு இறக்குமதி அளவினை நிர்ணயித்தது. எனினும், தொடர்ச்சியான பொருளாதார விரிவாக்கம் மற்றும் பரந்தளவான ஏற்றுமதிக் கேள்வி என்பன இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளை தூண்டின. இறக்குமதி விலைகளின் திரண்ட வளர்ச்சி ஏற்றுமதி விலைகளின் வளர்ச்சியினை விஞ்சியதன் காரணமாக 2005 இல் வர்த்தக மாற்றுவீதம் 4.2 சதவீதத்தினால் தேய்வடைந்தது. 2005 இல் வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர்கள் 2,516 இற்கு அதிகரித்த அதேவேளை நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை ஐ.அ.டொலர்கள் 650 மில்லியன்களுக்கு 0.3 சதவீதத்தினால் சிறிதளவு விரிவடைந்தது. ஐ.அ.டொலர்கள் 1,918 மில்லியன்களுக்கு 22.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த பண அனுப்புதல்களின் பாரிய அதிகரிப்பானது நடைமுறைக் கணக்குக் குறையினைக் கட்டுப்படுத்த உதவியது. 2005 இல், மூலதன மற்றும் நிதியியல் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 94.0 சதவீதத்தினால் அதிகரித்தமையின் விளைவாக, 2005 இல் திரண்ட சென்மதிநிலுவை மிகை ஐ.அ.டொலர்கள் 501 மில்லியன்களாகியது. இவை அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்கீடுகளை ஐ.அ.டொலர்கள் 2,735 மில்லியன்களுக்கு உயர்த்தின. (3.7 மாதங்களுக்கான இறக்குமதிகள்) செலாவணிவீதம் ஐ.அ.டொலருக்கு

வரைபடம் 5.2
சென்மதி நிலுவை




எதிராக 2.4 சதவீதத்தினால் பெறுமானத்தில் உயர்வடைந்தது. உள்நாட்டு மொத்த உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த வெளிநின்ற படுகடன் 48.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டு வருவாய்களின் அதிகரிப்பு மற்றும் கடன் கொடுப்பனவுக் காலம் சட்டரீதியாகப் பிற்போடப்பட்டமை என்பவற்றின் விளைவாக 2005 இல் படுகடன் தீர்ப்பனவு விகிதம் மேலும் முன்னேற்றமடைந்தது.

## 5.2 வெளிநாட்டுத்துறைக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

- **பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதி என்பன 2005 இல் சுதந்திரமானதும் தாராளமயமானதுமான சூழலில் தொடர்ச்சியாகத் தொழிற்பட்டன. முழுமையான நடைமுறைக் கணக்கு மாற்றம், பகுதியளவான மூலதனக் கணக்கு மாற்றம் மற்றும் சுதந்திரமாக மிதக்கவிடப்பட்டதொரு செலாவணி வீத அமைப்பு என்பன காணப்பட்டது.** சிறிய திறந்த பொருளாதாரமாக இருப்பதனால் தொடர்ச்சியான தாராள பொருளாதாரச் சூழல், வர்த்தகத்தில் பாரிய சுதந்திரம் என்பவற்றில் முன்னேறியதுடன் கடந்த மூன்று தசாப்த காலத்தில் இலங்கை தனது வளர்ச்சி உந்துகையை வெற்றிகரமாகப் பேணி முதலீடு மற்றும் கொடுப்பனவுகளால் நன்மையடைந்த அதேவேளை மீண்டெழும் வெளிநாட்டு அதிர்வுகளை எதிர்கொள்ளக் கூடியதான சூழ்நிலையை வலுப்படுத்தியது. 1994 இலிருந்து, ப.நா. நிதிய உறுப்புரை VIII இன் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு நடைமுறைக் கணக்கு மாற்றம் பேணப்பட்டது. ஆயினும், பாரிய மற்றும் மாற்றமடைகின்ற மூலதன உட்பாய்ச்சல்களிலிருந்து நாட்டைப் பாதுகாத்துக்கொள்ள வரையறுக்கப்பட்ட மூலதனக் கணக்கு கட்டுப்பாடுகள் இன்னும் நடைமுறையிலுள்ளது. 2001 இலிருந்து சுதந்திர

மாக மிதக்கவிடப்பட்ட செலாவணிவீத முறைமையும் பொருளாதாரத்தை சிறந்த முறையில் பாதுகாத்துள்ளது. குறிப்பாக ஏற்றுமதித் துறை தனது வெளிநாட்டுப் போட்டித்தன்மையை நாட்டின் பொருளாதார அடிப்படைகளின் மாற்றங்களுடன் இணைந்து செல்லும் வகையில் பரந்தளவில் செலாவணி வீதத்தின் சுயாதீன சீராக்கங்கள் ஊடாக பேணியது.

- **இலங்கை ஓரளவு தாராளமான வெளிநாட்டு முதலீட்டு அமைப்பு ஒன்றை தொடர்ந்து பேணி வருகின்றது.** பணக்கடன் வழங்கல், நகைஅடைவு பிடித்தல் 1 மில்லியன் ஐ.அ.டொலர்களுக்குக் குறைவான மூலதனத்தைக் கொண்ட சில்லறை வியாபாரம் மற்றும் கரையோர மீன்பிடி ஆகிய நான்கு துறைகள் தவிர்ந்த, ஏனைய துறைகளுக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டு அமைப்பு திறந்து விடப்பட்டுள்ளது. ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர்கள் 200 மில்லியன்களாக இருந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1-2 சதவீதம்) 2005 இல் ஐ.அ.டொலர்கள் 272 மில்லியன்களை அடைந்தது. சிறந்த முதலீட்டாளர்களை இனங்காண்பதன் மூலமும் பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமை முறைமை+ திட்டம் மற்றும் இருபுடை உடன்படிக்கைகள் போன்ற பலவிதமான ஊக்குவிப்புக்கள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கைகள் மூலம் அவர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும் விரைவுபடுத்தப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சியில் வெளிநாட்டு முதலீடுகளின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு அரசாங்கம் எதிர்காலத்தில் பெருமளவான நேரடி முதலீடுகளைக் கவர எண்ணியுள்ளது.

- **இலங்கையின் தலா வருமானம் உயர் மத்திய வருமான மட்டத்திற்குள் நகர்ந்ததன் காரணமாக நாட்டின் சலுகை நிதிகளைப் பெற்றுக் கொள்வது குறைவடைவதனால் வெளிநாட்டு நிதியிடல் மூலங்களை பல்வகைப்படுத்த அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.** அரச மற்றும் தனியார் துறைகளுக்கான வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலங்களை பல்வகைப்படுத்துவதற்காக மூலதன கணக்கு படிப்படியாக திறந்துவிடப்பட்டுக் கொண்டிருக்கிது. நாட்டை விட்டுக் குடிபெயர்ந்த இலங்கையர்களிடமிருந்து வளங்களைத் திரட்டுவதற்கான ஓர் ஆரம்பப் படியாக அரசு நாட்டைக் கட்டியெழுப்பும் முறிகளை வெளியிட்டுள்ளதுடன், அரச ரூபாய்ப் பிணைகளில் குறிப்பிட்டதொரு விகிதத்தை வதியாதோர் முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலும், பன்னாட்டு மூலதனச் சந்தைகளிலிருந்து கடன் பெறுகைககளை இலகுபடுத்துவதற்காக அரசு நாட்டிற்கான தரமிடலைப் பெற்றுள்ளது.

- **பல்புடை, பிராந்திய மற்றும் இருபுடை வர்த்தக ஒழுங்குகள் என்பவற்றின் விரிவாக்கத்துடன் 2005 இல் வெளிநாட்டு வர்த்தக உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட்டது.** உலக வர்த்தக அமைப்பின் ஒரு நிறுவன உறுப்பினர் என்ற ரீதியில் இலங்கை தொடர்ந்தும் பல்புடை வர்த்தக முறைமைக்குஉறுதியான கடப்பாடுடைய தாகவுள்ளது. இலங்கை பொருட்களுக்கான வர்த்தகம் மீதான கடப்பாடுகளையும் காப்புறுதி, தொலைத் தொடர்புகள், உல்லாசப் பயணம் மற்றும் நிதியியல் பணிகள் பற்றிய பணிகளிலுள்ள வர்த்தகத்தின் பொது உடன்படிக்கையின் கீழான கடப்பாடுகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது. 2005 திசெம்பரில் கொங்கொங்கில் நடைபெற்ற ஆறாவது அமைச்சர் மட்டத்திலான கூட்டத்தில் இலங்கை வெற்றிகரமாக பங்களிப்புச் செய்ததுடன் விசேட உற்பத்திகளாக பல்வேறுபட்ட வேளாண்மை உற்பத்திகளைக் குறித்துரைப்பதன் மூலம், உள்நாட்டு வேளாண்மையாளர்களுக்கு உதவி செய்வதற்காக தீர்வைக் குறைப்பிலிருந்து இவ்வகைப் பொருட்களுக்கு விதிவிலக்கு அளிக்குமாறும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியது. மேலும், முன்மொழியப்பட்ட "புதிய விசேட பாதுகாப்புப் பொறிமுறை" இன் கீழ் இலங்கை தனது உள்ளூர் வேளாண்மையாளர்களைப் பாதுகாப்பதற்காக குறிக்கப்பட்ட வேளாண்மை உற்பத்திகள் மீது உயர்ந்தளவான தீர்வைகளை விதிப்பதற்கான சுதந்திரத்தைப் பேணுமென எதிர்பார்க்கின்றது. எனினும், உள்நாட்டு வேளாண்மைக்கு உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வழமுறைகள் அறிமுகப்படுத்தும்வரை வேளாண்மைக்கான பாதுகாப்பு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மட்டுமே இருக்க வேண்டும். பாதுகாப்பைத் தொடர்ந்து முன்னெடுத்தல் இலங்கையின் ஏற்றுமதி போட்டிகள் மற்றும் நுகர்வோர் நலன்கள் என்பவற்றில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.

- **2005 இல் பிராந்திய வர்த்தக ஒழுங்குகள் மூலம் இலங்கை சந்தை நுழைவினை அடைந்து**

அட்டவணை 5.2
சராசரி இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)

| விடயம் | 2001 | 2002 | 2003 | 2004 | 2005(ஆ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **13.3** | **13.3** | **13.5** | **10.4** | 10.4 |
| உணவும் குடிபானமும் | 15.3 | 14.4 | 14.2 | 8.5 | 9.6 |
| அரிசி | 21.2 | 32.9 | 29.1 | 4.9 | 10.6 |
| மா | 13.3 | 12.3 | 11.5 | 7.2 | 3.8 |
| சீனி | 16.2 | 16.0 | 16.8 | 4.6 | 1.5 |
| கோதுமையும் மெசுலீனும் | 0.0 | 0.0 | 0.0 | 0.1 | 1.1 |
| பாலும் பால் உற்பத்தியும் | 15.3 | 11.9 | 12.2 | 7.9 | 10.2 |
| கருவாடு | 2.0 | 7.9 | 10.8 | 5.9 | 5.9 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 6.3 | 6.8 | 7.9 | 10.0 | 9.8 |
| ஏனைய உணவு உற்பத்திகள் | 25.4 | 22.9 | 22.3 | 17.4 | 22.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 10.9 | 12.1 | 13.0 | 12.2 | 11.1 |
| உந்துஊர்திகளும் துவிச்சக்கர வண்டிகளும் | 21.1 | 23.3 | 22.1 | 21.1 | 18.9 |
| வானொலிப்பெட்டிகளும் தொலைக்காட்சி பெட்டியும் | 8.3 | 8.6 | 8.9 | 9.4 | 13.6 |
| இறப்பர் ரயரும் ரியூப்பும் | 29.6 | 27.9 | 26.0 | 25.8 | 26.2 |
| மருந்தாக்கல் பொருட்கள் | 0.6 | 0.6 | 0.6 | 0.6 | 0.5 |
| ஏனைய உணவல்லா விடயங்கள் | 9.7 | 9.4 | 9.2 | 8.9 | 8.7 |
| **நடுத்தரப் பொருட்கள்** | **1.7** | **1.6** | **1.5** | **1.9** | **1.9** |
| வளமாக்கி | - | 0.4 | 2.6 | 3.1 | 2.7 |
| மசகெண்ணெய் | ... | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| ஏனைய பெற்றோலிய உற்பத்திகள் | 0.9 | 0.8 | 0.8 | 0.9 | 0.9 |
| இரசாயன கூறுகளும் கலவைகளும் | 3.3 | 1.1 | 2.2 | 2.6 | 2.0 |
| நிறமூட்டல், தோல்பதனிடல், வர்ணமிடல் | 6.3 | 4.0 | 4.6 | 4.5 | 4.4 |
| தாளும் தாள் மட்டையும் | 6.7 | 5.2 | 5.4 | 6.0 | 6.0 |
| புடவையும் ஆடையும் | 0.1 | 0.1 | 0.1 | 0.0 | 0.1 |
| ஏனைய நடுத்தரப் பொருட்கள் | 4.2 | 4.3 | 3.3 | 4.3 | 4.5 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **5.3** | **5.5** | **7.2** | **6.1** | **5.8** |
| கட்டடப்பொருட்கள் | 9.3 | 7.4 | 7.7 | 9.0 | 7.8 |
| போக்குவரத்துக் கருவிகள் | 10.3 | 11.0 | 12.9 | 11.9 | 9.7 |
| பொறிகளும் கருவிகளும் | 2.7 | 3.7 | 5.6 | 3.2 | 3.3 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 4.2 | 3.8 | 4.6 | 5.0 | 5.3 |
| **மொத்தம்** | 4.9 | 4.8 | 5.3 | 4.5 | 4.3 |

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பு
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

**கொள்வதில் மேலும் முன்னேற்றமடைந்துள்ளது.** 2004 சனவரியில் நடைபெற்ற பிராந்திய உச்சி மகாநாட்டில் தெற்கு ஆசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையை 2006 சனவரி 1 இலிருந்து தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையாக மாற்றியமைத்து செயற்படுத்துவதற்கு இலங்கை கடந்த காலத்தில் தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை நிறுவுவதற்கு பல முயற்சிகள், எடுக்கப்பட்டபோதும் போதிய அரசியல் ஆர்வம் இல்லாமையும் உறுப்பினர்களுக்கிடையே காணப்பட்ட பிணக்குகளும் இதன் முன்னேற்றத்திற்கு தடையாக விளங்கியது. நடைமுறையிலுள்ள ஒப்பந்தத்திற்கமைய தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையானது நான்கு தூண்களைக் கொண்டு கட்டியெழுப்பப்படும். அவையாவன மூலப்பிரமாண ஒழுங்குவிதிகளைத் தாபித்தல், எதிர்மறைப் பட்டியலை ஏற்றுக்கொள்ளல். குறை விருத்தி நாடுகளுக்கான வருமான இழப்பு நிவாரணத்திற்கான பொறிமுறை ஒன்றினை ஏற்றுக்கொள்ளல், மற்றும் தேவையான நாடுகளுக்கான தொழில்நுட்ப உதவியை தாபித்தல் என்பனவாகும். தெற்கு ஆசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தீர்வைக் குறைப்பிற்கான முதலாவது கட்டம் 2006 யூலை 1 இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், பிராந்தியங்களுக்கிடையிலான தீர்வைக்குறைப்பு தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2016 ஆம் ஆண்டளவில் பூரணமாகத் தொழிற்பாட்டிற்கு வரும் வேளையில் 1-5 சதவீதத்திற்கும் குறைவானமட்டத்தை அடையும். பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா அமைப்பின் வரைவு உடன்படிக்கை தொடர்பாக இறுதி முடிவெடுப்பதில் இலங்கை கணிசமானளவு முன்னேற்றங்களை அடைந்ததுடன் இது

பிராந்திய ஒப்பந்தங்கள் மீதானதொரு வளர்ச்சிப்படியாகவும் இருந்தது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் தீர்வை முன்னுரிமைகளைப் பரிமாற்றம் செய்வதற்காக நிறுவப்பட்ட வரைபுச் சட்டமான வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறையின் உறுப்பு நாடுகளிலிருந்து இலங்கை தீர்வைச் சலுகைகளை தொடர்ந்து பெற்றுக் கொண்டது.

- **இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமிடையிலான இருபுடைப் பேச்சுவார்த்தைகள் 2005 இல் வெற்றியளித்துள்ளது எனினும் முழுமையான நன்மைகளை அனுபவிக்க மேலும் பேச்சு வார்த்தைகள் தேவைப்படுகிறது.** நடைமுறையிலிருக்கும் முன்னுரிமைகளின் பொதுமைப் படுத்தப்பட்ட முறையானது முன்னுரிமைகளின் பொதுமைப் படுத்தப்பட்ட முறைமை+ பொதுத் திட்டம் மற்றும் படைக்கலம் தவிர்ந்த சகல வற்றையும் உள்ளடக்கிய திட்டம் என்பனவற்றை உள்ளடக்கிய மூன்று அடுக்குத் திட்டத்தின் மூலம் பதிலீடு செய்யப்பட்டன. முன்னுரிமைகளின் பொதுமைப்படுத்தப்பட்ட முறைமை+ திட்டத்தின் கீழ் 2005 யூலை 1 இலிருந்து பூச்சிய தீர்வை சலுகைகளுக்கு இலங்கை தகுதி பெற்றிருந்தபோதும் புதிய முன்னுரிமைகளின் பொதுமைப்படுத்தப்பட்ட திட்டமானது பொதுத்திட்டம் மற்றும் சுடுகலன் தவிர்ந்த சகலவற்றையும் உள்ளடக்கிய திட்டம் என்பவற்றுடன் 2006 சனவரி 1 இல் முழுமையான தொழிற்பாட்டிற்கு வந்தது. விசேட அபிவிருத்தித் தேவைகள் மற்றும் உறுதியான அபிவிருத்தி மற்றும் சிறந்த ஆளுகை போன்ற குறிக்கோள் பிரமாணங்களுக்கு உதவி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட முன்னுரிமைகளின் பொதுமைப்படுத்தப்பட்ட முறைமை+ திட்டத்தின் கீழ் இலங்கை தீர்வை முன்னுரிமை பெறுவதற்கான முதலாவது நாடாக விளங்கியது. இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு சில முக்கிய இறக்குமதிகளான புடவைகளும் ஆடைகளும், புகையிலை, கையுறை, மட்பாண்டப் பொருட்கள் மற்றும் செயற்படு காரியம் ஆகியவற்றை உள்ளடக்கிய 7,200 உற்பத்திகளை உள்ளடக்கியதாக தீர்வையற்ற சலுகை நுழைவினை பொதுமைப் படுத்தப்பட்ட முன்னுரிமை முறைமை+ வழங்கியுள்ளது. ஆயினும் கடுமையான மூலப்பிரமாண விதிமுறைகள் காரணமாக, குறிப்பாக ஆடைக் கைத்தொழில் இதில் தகுதிபெறுவதற்கு குறைந்தபட்சம் 50 சதவீதம் பெறுமதி கூட்டலை கொண்டிருக்க வேண்டுமென நாடு வேண்டப்படுவதால் இந்த வசதியின் பயன்பாடு எதிர்பார்த்ததைவிட மிகவும் குறைவாகும். ஆடைகள் துறை 50 சதவீதத்திற்கு மேல் பெறுமதி கூட்டலை அடைவதற்கு குறைந்தளவான உள்நாட்டு மூலப்பொருள் தளம் அனுமதிக்கவில்லை. ஆகையால், முன்னுரிமைகளின் பொதுமைப்படுத்தப்பட்ட முறைமை+ இன் கீழான நன்மைகளை பெறுவதற்கு பெறுமதி கூட்டல் பகுதியை 35 சதவீதமாக குறைப்பதற்கு இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துடன் தீவிரமான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

- **இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதாரப் பங்குடைமை ஒப்பந்தம் மீதான பேச்சுவார்த்தைகள் 2005 இல் தொடர்ந்தது.** பண்டங்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகம், முதலீட்டுப் பாய்ச்சல்களை மேம்படுத்தல் மற்றும் போக்குவரத்து, உட்கட்டமைப்பு, கல்வி, சுற்றுலா மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பகுதிகளில் பொருளாதாரக் கூட்டுறவை விரிவாக்குவதன் மூலமாக தற்போதுள்ள இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை விரிவாக்க எண்ணியுள்ளது. அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதாரக் கூட்டுறவு ஒப்பந்தத்தின் விரைவானதும் ஆக்க பூர்வமானதுமான நடைமுறைப்படுத்தலுக்கான வழிகாட்டியாகவும், மற்றும் வரைபுச் சட்டத்தை வரைவதற்காகவும் இலங்கையும் இந்தியாவும் பல சுற்று தொழில்நுட்ப மட்டப் பேச்சுவார்த்தைகளை நடாத்தின.

- **இலங்கைக்கும் பாகித்தானுக்குமிடையில் கையொப்பமிடப்பட்ட வர்த்தகம் மீதான வரைபுச் சட்ட ஒப்பந்தம் 2005 யூனிலிருந்து தொழிற்படத் தொடங்கியது.** இலங்கைத் தேயிலை, வெற்றிலை மற்றும் ஆடைகள் மற்றும் மட்பாண்டப் பொருட்கள் போன்ற பாரியளவானதொரு பண்டங்களுக்கு சலுகைகளைப் பெற்றுக்கொண்ட அதேவேளை பாகித்தானும் தனது பிரதான ஏற்றுமதிகளான வஸ்மதி அரிசி, உருளைக்கிழங்கு போன்றவற்றிற்கு சலுகைகளைப் பெற்றுக் கொண்டது. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழுள்ள நான்கு இலக்க மட்ட தேவைப்பாடுடன் ஒப்பிடுகையில் பண்ட உருமாற்றம் தொடர்பாக ஆறு இலக்கம் வரையான மட்டத்தை மட்டும் கொண்ட இறுப்புத் தலைப்புக்களைக் கொண்ட இணைப்பு முறைக் குறியீடு (இணங்குவிக்கப் பண்ட விபரண குறியீட்டு முறைமை) வேண்டப் பட்டிருத்தல் மூலப் பிரமாண விதிகளை நிறைவுசெய்வதில்

*சிறப்புக் குறிப்பு - 9*

## இந்தியா மற்றும் இலங்கைக்கிடையிலான பரந்த பொருளாதார நட்புறவு உடன்படிக்கை

நடைமுறையிலுள்ள இந்திய-இலங்கை திறந்த வர்த்தக உடன்படிக்கையானது 1998 இல் கைச்சாத்திடப் பட்டதுடன் நடைமுறையில் 2000 இல் பரந்த பொருளாதார நட்புறவு உடன்படிக்கைக்கான ஆரம்ப வேலை ஆரம்பிக்கப்பட்டது. பெரும்பாலும் பொருட்களின் வர்த்தகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட தற்போதைய இருபுடை ஒத்துழைப்பின் பூர்த்தி செய்யக்கூடிய பரிமாணங்கள், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை சேர்த்துக்கொள்வதன் மூலம் இவ் உடன்படிக்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. பரந்த பொருளாதார ஒரு பகுதியாக இருப்பதுடன் பிராந்தியத்தில் ஆழமான பொருாதார ஒருங்கிணைப்பை நோக்கி நகர்வதற்கான முதலாவது படிக்கல் ஆகும்.

இந்திய இலங்கை திறந்த வர்த்தக உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் 2001 ஆண்டு முதல் இலங்கையின் இறக்குமதிகளின் பெரியஅளவிலான வழங்குநராக இந்திய விளங்கியதுடன் 2005 இல் 21 சதவீதமான இறக்குமதிகள் இந்தியாவினை மூலமாக கொண்டிருந்தன. மொத்த ஏற்றுமதிகளின் சதவீதமாக இந்தியாவுக்கான ஏற்றுமதிகள் 2000 இன் 1.3 சதவீதத்தில் இருந்து 2005 இல் 8.9 சதவீதத்திற்கு விரிவடைந்தது. கூடியளவான பொருளாதார ஒருங்கிணைப்பினை உள்ளார்ந்த வளமான நன்மைகளை அடைவதில் இருபக்க உறவுநிலைமை மதிப்பிடுவதற்கும் நட்புறவு உடன்படிக்கைக்குள் நுழைவதனால் இரண்டு நாடுகளின் அரசாங்கங்களும் பிரதம மந்திரிகளின் வழிகாட்டல்களில் சிறந்த ஒத்துழைப்பினை நோக்கி சரிவர இரு பொருளாதாரங்களையும் எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது பற்றிய விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்கும் இணைந்த கற்கைக் குழுவை நியமித்தது. இக்குழுவின் கண்டறியப்பட்ட பணிகளில் இனங்காணப்பட்ட துறைகளில் தற்போதைய இந்திய இலங்கை திறந்த வர்த்தக உடன்படிக்கையின் ஒன்ற ிணைக்கும் கடப்பாடு களிலான முன்னேற்றங்கள் மற றும் கல்வி, மருத்துவம் மற்றும் சுகாதாரம் போக்கு வரத்து மற்றும் கடல் மூலவள ஆராய்ச்சி என்பவற றில் முதலீட்டுப் பாய்ச்சலை வசதிப்படுத்தல் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல்கள் வர்த்தகச் செயலாளர்கள் மட்டத்திலான கூட்டங்களுடன் 2004 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பேச்சுவார்த்தைக்கான அடிப்படைத் தத்துவங்களாக இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த காரணிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவை இரண்டு பொருளாதாரங்களிலும் சமச்சீரற்ற தன்மை தொடர்பாக கூடிய கவனம் செலுத்துதல் மற்றும் சேவை துறையினை விருத்தியடைய செய்தல் மற்றும் தொடர்ச்சியான தாராளமயமாக்கல் என்பவையாகும்.

செயலாளர் மட்ட கூட்டங்களின் பலனாக இரண்டு நாடுகளும், உரிய செயற்பாட்டுக் குழுக்களுடன்/ துணைக் குழுக்களுடன் வர்த்தக செயலாளர்களின் தலைமையின் கீழ் குறிப்பிட்ட துறைக்கான பேச்சுவார்த்தைகளை தொடரக்கூடிய வர்த்தக பேச்சுவார்த்தை குழுவினை நியமித்தது. இரண்டு பகுதிகளும் 2006 சனவரி இறுதியில் ஆறு சுற்று தொழில்நுட்ப மட்டத்திலான கலந்துரையாடல்களை நடாத்தியதுடன் அனைத்து துணைத் துறைகளிலும் கணிசமான முன்னேற்றத்தை அடைய முடிந்ததுடன் குழுக்கள் தொடர்ந்து மீதமாகவுள்ள விடயங்களைத் தீர்ப்பதற்கும் இணங்கின.

பொருட்களின் வர்த்தகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் தற்போதைய இலங்கை இந்திய திறந்த வர்த்தக உடன் படிக்கைகளின் எதிர்க்கணியப் பட்டியலின் அளவினை குறைத்தல், ஆரம்ப பிரமாண ஒழுங்குவிதிகளை தளர்த்துதல், சுங்கத் தீர்வையற்ற தடைகளை ஒழித்தல், உற்பத்தி தரங்களின் பரஸ்பர அங்கீகாரம் தொடர்பான முடிவுசெய்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சட்டச் சூழல் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை போன்றவற்றை இலக்காக கொண்டிருந்தது.

சேவைகள் துறையிலான இருபுடைப் பேச்சு வார்த்தைகள், சேவைகளிலான பொது உடன்படிக்கையின் பேச்சுவார்த்தை அமைப்பு வேலை மற்றும் அதன் சாதகமான அணுகுமுறை படிப்படியான தாராளமயமாக்கல் மற்றும் அமைப்பு வேலையின் தாராளமயமாக்கல் என்பவற்றிற்கு இணங்க செயற்படுத்தப்படுகின்றது. இரண்டு நாடுகளும் சாதாரண நபர்களின் அசைவு, தொழிற்றிறன் சேவைகள் தொடர்பான பரஸ்பர அங்கீகார உடன்படிக்கைகள் மற்றும் மாதிரி 3 மற்றும் மாதிரி 4[1] இன் கீழ் சேவைகள் வழங்குதல் போன்ற பிரச்சினைகளையும் கலந்துரையாடின. ஆரம்ப பட்டியலுக்கான கரிசனைக்குரிய பணிகள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு கைத்தெழில் கட்டட

நிர்மாணம் மற்றும் பொறியியல், சுகாதாரம், போக்குவரத்து மற்றும் துணைச் சேவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் பிணையங்கள் சேவைகளை உள்ளடக்கிய நிதிச்சேவைகள், சேவைகள் துறைக்கான வாய்ப்பினுள் வரும் துணைக்குழு ஒன்றின் கீழ் தனித் தனியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. தேசிய அளவிலான நடத்தும் விதத்தினூடாக வழங்கப்படக் கூடிய சலுகைகளுடன் நிதியியல் பணிகளில் உத்தேசிக்கப்பட்ட தாராளமயமாக்கம் அநேகமாக மாதிரி 3 தொடர்பானதாக இருக்கும். மாதிரி 1 இன் கீழான எந்த கணிப்பீடுகளும் குறிப்பிடத்தக்க இடர்பாடுகளை ஏற்படுத்துவதால் மூலதன கணக்கின் தாராளமயப்படுத்தலினாலான தேசிய கொள்கைகளின் அபிவிருத்திகளாகக் கருத்தில் கொள்ளப்படும்.

திறந்த வர்த்தக உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து இந்தியாவின் வர்த்தக வழிகாட்டலுக்கான முதலீடுகள் கணிசமாக அதிகரித்ததுடன் இந்தியா, இலங்கையில் பிரதான முதலீட்டாளருக்கான முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொண்டது. இன்று சார்க் பிராந்தியத்தில் இந்திய முதலீடுகளின் கணிசமான பங்கு இந்திய முதலீடுகள் இலங்கையில் முதலிடப்பட்டிருப்பதுடன் 2005 இல் மொத்த முதலீடு ஐ.அ.டொலர் 181 மில்லியனை தாண்டியிருந்ததுடன் இந்தியா, இலங்கையில் ஏழாவது மிகப்பெரிய வெளிநாட்டு முதலீட்டாளராக வந்துள்ளது. இரண்டு நாடுகளினதும் தந்திரோபாயங்களின் முக்கியத் துவத்தைக் கருத்திற் கொள்கையில் முதலீட்டுக்கான பேச்சுவார்த்தைகள் எதிர்கால முதலீட்டுப் பாய்ச்சலை அதிகரிப்பதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் இரண்டு பொருளாதாரங்களிலும் இருபுடை முதுலீட்டைப் பாதுகாப்பதையும் முதலீட்டுச் சூழலை எதிர்வுகூறுவதையும் நோக்காகக் கொண்டுள்ளது. இத்துடன் பரந்த பொருளாதார நட்புறவு உடன்படிக்கையின் பரந்தளவான அதிகார எல்லைக்குக் கீழ் வரும் துணை நல உடன்படிக்கை மீது இரட்டை வரித் தவிர்ப்பு மற்றும் வரி ஏய்ப்பு மீதும் துணைக்குழுவானது பணிபுரிகின்றது. இந்த நடவடிக்கைகள் முதலீட்டாளர்களின் நம்பகத் தன்மையை உயர்த்தும் அதேவேளை இலங்கைக்கான முதலீட்டு பாய்ச்சலின் அளவினையும் தரத்தினையும் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதார ஒத்துழைப்பின் பின்னணியில் இந்தியா உதவியினை அதிகரிக்கக்கூடிய முன்னுரிமை துறைகளான கல்வி, சுகாதாரம், புகையிரத போக்குவரத்து, மரபுரீதியற்ற மின்உற்பத்தி மற்றும் அறிவுச் சொத்துரிமை அபிவிருத்தி என்பவற்றை இலங்கை அடையாளப்படுத்தியுள்ளது. உதவியளிப்பதற்கான குறிப்பிட்ட துறைக்கான செயற்றிட்ட முன்மொழிவுகள் பங்குதாரர்களுடன் ஆலோசித்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

பரந்த பொருளாதார நட்புறவு நடவடிக்கைகளின் கீழ் பிரயோகிக்கத்தக்க வெளிப்படையான ஆரம்ப பிரமாண ஒழுங்குவிதியை வரைவிலக்கணப்படுத்தல் சுங்க வரியினை குறைப்பதற்கு சமமான முக்கியத்துவத்தினை பெறுகின்றது. ஆரம்ப பிரமாண ஒழுங்குவிதிகளின் பிரமாணங்களின் மூலம் நாட்டிலிருந்து போதியளவு உள்ளீடுகளைக் கொண்ட சலுகை அடிப்படையிலான சுங்க வரியின் கீழ் பொருள் அல்லது சேவை வர்த்தகம் செய்யப்படுவதனை உறுதிப்படுத்துகிறது. பொருட்களின் வர்த்தகத்தைப் பொறுத்த மட்டில் ஆரம்ப பிரமாண விதிகளின் தீர்மானமானது நேரடியாக மேற்கொள்ளப்படுகிறது. உற்பத்தியுடன் சேர்க்கப்பட்ட உள்ளீடுகள் வேறு நாடுகளிலிருந்தானதாக இருந்தால் உறுப்பு நாடானது பிரமாண ஒழுங்கு விதியின் கீழ் ஆகக்குறைந்த பெறுமதி சேர்ப்பினை பூர்த்தி செய்தல் வேண்டும். எவ்வாறெனினும் சேர்க்கப்பட்ட சேவைகள், முதலீடு மற்றும் பரந்த பொருளாதார நட்புறவு உடன்படிக்கையின் கீழ் வெளிப்படையான தன்மை மற்றும் இலகு ஆரம்ப பிரமாண ஒழுங்குகளை வரைவிலக்கணப் படுத்தல். எதிர்கால உள்ளார்ந்த வளம் மிக்க வர்த்தக முரண்பாடுகளைத் தவிர்ப்பது இரு நாடுகளுக்கும் முக்கியமானதும் தீர்வுக்குரியதுமாகும்.

மூலம்: வர்த்தகத் திணைக்களம்
இலங்கை முதலீட்டுச் சபை

1 பணியொன்று நான்கு வெவ்வேறான மாதிரிகளில் வர்த்தகம் செய்யப்பட முடியும். மாதிரி 1 - நாடுகளின் எல்லைகளிலான வர்த்தகம், மாதிரி - 2 வெளிநாட்டு நுகர்வு: பணி பெறுபவர் பணியைப் பெறுவதற்கு வெளிநாடொன்றுக்குப் பயணம் செய்தல், மாதிரி 3 - வர்த்தகப் பிரசன்னம்: பணிகளை உற்பத்தி செய்வதற்கும் விற்பதற்கும் வர்த்தக நிறுவனங்கள் நிறுவப்படும் போது மற்றும் மாதிரி 4 - இயல்பான ஆளொருவரின் பிரசன்னம்: தனிநபர்கள் பணிகளை விற்பதற்கு வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் போது.

நெகிழ்ச்சித்தன்மை கொண்டதாக இருத்தல் இந்த உடன்படிக்கையின் ஒரு சிறப்பம்சமாகும். இது இலங்கை வெளிநாட்டு முதலீடுகளைக் கவரவும் சந்தைக்கான உற்பத்திப் பொருட்களை உள்நாட்டுக் கைத்தொழில்கள் பெரியளவில் இலகுவாக உற்பத்தி செய்ய ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் உதவும். இவ்வுடன்படிக்கையின் கீழ், எதிர்மறையான பட்டியல்களிலுள்ள பண்டங்கள் தவிர இலங்கை ஐந்து ஆண்டு காலம் ஒன்றிற்குள் பண்டங்கள் மீதான தீர்வைகளை முடிவுறுத்தும் அதேவேளை பாக்கித்தான் இதனை மூன்று ஆண்டுகளுக்குள் செய்யும்.

- **2005 இல் மேலும் பல இருபுடை வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.** இலங்கையும் தாய்லாந்தும் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை

ஒன்றில் கைச்சாத்திட இணங்கியுள்ளன. குறிப்பாக புடவைகள் மற்றும் ஆடைகள் அனுமதிப்பங்கு முறை நீக்கப்பட்டதன் பின்னணியில் ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் தொடர்பான இலங்கைக்கான வாய்ப்புக்கள் முன்னேற்றமடைந்து செல்வதுடன் இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவிற்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றின் ஆரம்பம் தொடர்பாக ஐக்கியஅமெரிக்க அதிகாரிகளிடம் தொடர்ந்து, பேச்சுவார்த்தை நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வர்த்தகம் மற்றும் பொருளாதார விடயங்களை வெற்றிகரமாக தீர்த்துவைத்தல் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான வாய்ப்புக்களை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கான ஒரு முக்கியமான பொறிமுறையாக இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையிலான வர்த்தக மற்றும் முதலீடு வரைபுச்சட்ட உடன்படிக்கையின் கீழான பேச்சுவார்த்தை அமைந்திருந்தது. இலங்கைக்கும் ஈரானுக்கு மிடையிலான கட்டமைப்பு உடன்படிக்கை 2004 நவெம்பரில் கைச்சாத்திடப்பட்டதுடன் 2005 செத்தெம்பரில் சலுகைப் பட்டியல்கள் மீதான பேச்சுவார்த்தைகள் கொழும்பில் இறுதியாக்கப்பட்டன. இரு நாடுகளினதும், உடன்படிக்கைக்கு வலுவளிக்கும் விதத்தில் உள்நாட்டுச் சட்ட நடைமுறைகளை பூரணப்படுத்தும் செயல்முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. செயல்முறையின் நிறைவேற்றத்தை இருநாடுகளும் ஒன்றுக்கொன்று தெரியப்படுத்தியதுடன் உடன்படிக்கை நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **சந்தை நுழைவினை விரிவுபடுத்துவதற்காக பரந்தளவானதொரு ஆதரவினையும் வசதிகளையும் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குவதனை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்தது.** அரசாங்கத்தின் பிரதான வெளிநாட்டு முதலீட்டு மேம்படுத்தல் நிறுவனமான முதலீட்டுச்சபை ஏற்றுமதியாளர்களுக்கு வரி விடுமுறைகள் மற்றும் வரிவிலக்குகள் என்பவற்றை இறக்குமதி மூலப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் என்பனவற்றின் மீது வழங்குவதற்கு ஆதரவளித்தது. சந்தைப்படுத்தல், நிதியிடல் மற்றும் இலத்திரனியல் வியாபார வாய்ப்புக்கள் என்பன மூலம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தனது ஆதரவினை தொடர்ந்து வழங்கியது. ஏற்றுமதியின்போது ஏற்றுமதியாளர்களால் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க தொடர்ந்தும் உதவியதுடன் முயற்சியாளர் அபிவிருத்திக் கருத்தரங்கு அரசாங்க அலுவலர்களையும் தொழில் முயற்சியாளர்களையும் ஒன்றிணைத்து வைத்தது. "தேசிய ஏற்றுமதி உபாயம்; 2004-2008" இனால் மேற்கொள்ளப்பட்ட சில விதந்துரைப்புக்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் பல்தர நிறுவனங்களுடன் மிகவும் நெருக்கமான முறையில் செயற்பட்டன. கொடுகடன் உத்தரவாதங்கள் மற்றும் ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி என்பவற்றின் மூலம் 2005 இல் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதியாளர்களுக்கு உதவியது. உலக வர்த்தக நிறுவனத்துடன் தொடர்புடைய வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடைகளை மதிப்பிடுவதில் சம்பந்தப்பட்ட தராதரங்கள் மீதான தேசிய விசாரணை மட்டம், தொழில்நுட்ப ஒழுங்கு விதிகள் மற்றும் உறுதிப்படுத்தல் மதிப்பீட்டு வழிமுறைகள் மீது பணியாற்றுவதற்குப் புறம்பாக, இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் பொருத்தமான இலங்கை நியமங்களுக்கு எதிராக இலங்கை ஏற்றுமதிகளுக்கு தொடர்ந்து உத்தரவாதம் வழங்கியது.

- **பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் கீழ் உள்ள வர்த்தக மற்றும் தீர்வை கொத்தணி மற்றும் ஏற்றுமதி கொத்தணி என்பன வர்த்தகக் கொள்கைகள் மற்றும் செயலாற்றம் என்பனவற்றை மீளாய்வு செய்தன.** இடைநிலைப் பொருட்களின் உள்நாட்டு வழங்குநர்களுக்கான பெறுமதிசேர் வரிக் குறைப்பு, உயர் தொழில்நுட்பத்தைப் கொள்வனவு செய்வதற்கான தீர்வையற்ற சலுகை, தொழில்நுட்பத்தினை மேம்படுத்துவதற்கான நிதிஉதவி, இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப் பிரயோகம் மற்றும் ஆடைகள் கொள்வனவு அலுவலகங்களுக்கான பூச்சிய வீத வரி அமைப்பு என்பவற்றை உள்ளடக்கிய பல நடவடிக்கைகளை வர்த்தக மற்றும் தீர்வைக் கொத்தணி சிபார்சு செய்திருந்தது.

- **2005 இல் தீர்வை அமைப்பு மேலும் ஒழுங்கமைக்கப்பட்டதெனினும் பலதரப்பட்ட தகுதிவாய்ந்த குறிக்கோள்களை கவனத்திலெடுக்க வேண்டியிருந்தது.** தீர்வை நீக்கப்பட்டதன் மூலம் வர்த்தகத்தின் தாராளமளமாக்கல் பொருளாதார நலன்களை உருவாக்கிய போதிலும் இறை வருமானம் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் பாதுகாப்பை உயர்த்துதல், கைத்தொழிலுக்கு

விசேட ஊக்குவிப்புக்களை வழங்கியமை போன்ற தீர்வையின் ஏனைய குணாதிசயங்கள் தாராளமயப்படுத்தும் முயற்சிகளில் தலையிடுகிறது. கடந்த ஆண்டிலிருந்த 3 சதவீத, 6 சதவீத, 12 சதவீத, 16 சதவீத, 20 சதவீத மற்றும் 27.5 சதவீதங்களைக் கொண்ட ஆறு தீர்வை அமைப்பானது 0 சதவீத, 2.5 சதவீத, 6 சதவீத, 15 சதவீத மற்றும் 28 சதவீதங்களைக் கொண்ட ஐந்து பிரிவுத் தீர்வை அமைப்பினால் 2005இல் பிரதியீடு செய்யப்பட்டது. அடிப்படை மூலப்பொருட்கள் மீதான தீர்வை ஆகக்குறைந்த வீதத்தில் வைக்கப்பட்டிருந்த அதேவேளை இடைநிலைப் பொருட்கள் இடைத்தரமான தீர்வையில் வைக்கப்பட்டிருந்தன. முடிவுப் பொருட்கள் ஆகக்கூடிய தீர்வையில் வைக்கப்பட்டிருந்தது. அச்சிடல் செலவினைக் குறைப்பதற்காக சகல வகையான இறக்குமதி செய்யப்பட்ட கடதாசிகளும் பூச்சிய தீர்வைக்குக் கொண்டுவரப்பட்டன. தாவர எண்ணெய், மின்விசிறிகள் மற்றும் மின் பாகங்கள் போன்ற சில பொருட்கள் உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக உயர்ந்தளவிலானதொரு தீர்வைக்குட்பட்டிருந்தன. 2005 இல் வேளாண்மையாளர்களைப் பாதுகாப்பதற்காக அரிசி, கோதுமைத்தானியம் மற்றும் கோதுமைமா மீதான தீர்வைத் தளர்த்தல்கள் புறக்கீடு செய்யப்படுகின்றன. உயர் தொழில்நுடப் பயன்பாட்டிற்கான புதிய பொறிகளின் இறக்குமதிகளுக்கு தீர்வைச் சலுகைகள் வழங்கப்பட்டன. பால் மற்றும் பாலாடை, உருளைக்கிழங்கு, பருப்பு, அரிசி, சீனி, குழந்தைகளின் உணவு போன்ற உணவுப் பொருட்கள் மற்றும் சீமெந்து, கடதாசி மற்றும் கடதாசி அட்டைகள் மற்றும் முச்சில்லு வண்டிகள் போன்ற வகைப்பொருட்கள் தவிர்ந்த அனைத்து இறக்குமதிகளின் மீதும் 10 சதவீதமானதொரு மிகைக்கட்டணம் தொடர்ந்து அறவிடப்பட்டது. முச்சில்லு வண்டித் தொழிற்படுத்துனர்களுக்கான நிவாரண அளவுமுறையொன்றாக முச்சில்லு வண்டிகளுக்குப் பயன்படுத்தப்படும் ரயர்களுக்கான இறக்குமதித் தீர்வை 28 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. அரசிறை வழி முறை ஒன்றாக துறைமுக மற்றும் வானூர்தி நிலைய வரிவிதிப்பு 1 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. ஆயினும் ஏற்றுமதியாளர்களுக்கான ஒரு ஊக்குவிப்பாக ஏற்றுமதிகளுக்குப் பொருந்தத்தக்க துறைமுக மற்றும் வானூர்தி நிலைய ஏற்றுமதி வரிவிதிப்பு 0.25 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. சிகரட், பெற்றோலிய உற்பத்திகள், காற்றூட்டப்பட்ட நீர் மற்றும் உந்து ஊர்திகள் என்பவற்றிற்காக வரையறுக்கப்பட்டிருந்த கலால் வரியானது குளிரூட்டிகள், குளிர்சாதனப்பெட்டிகள், சலவைப் பொறிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைக்காட்சி அன்ரனாக்கள் மற்றும் மின் பொருட்கள் போன்ற சில நீண்டகால நுகர்வுக்கான பொருட்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. முச்சில்லு வண்டிகள், சரக்கு வண்டிகள் மற்றும் பொதுப்போக்குவரத்து பேரூந்துக்கள் தவிர்ந்த இறக்குமதி செய்யப்பட்ட அல்லது புதிதாக பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு உந்து ஊர்திகளுக்கும் பிடித்துவைத்தல் வரியாக 2005 இல் ரூபா 5,000 அறவிடப்பட்டது. மேலும் தரம் குறைந்த வாகனங்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்வதை ஊக்கம் குன்றச் செய்வதற்காக, 2005 இல் இறக்குமதி பரிசோதனை சான்றிதழிடும் முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. சங்கீதக் கல்வியை இலகுபடுத்து வதற்காக, சங்கீதக் கருவிகள் மீதான இறக்குமதித் தீர்வை 28 சதவீதத்தில் இருந்து 2005 இல் 15 சதவீதமாக குறைக்கப்பட்டது. இவ்வாண்டில் தீர்வை மாற்றங்களின் தேறிய விளைவு யாதெனில் இறக்குமதிகள் மீதான சராசரித் தீர்வை 2004இன் 4.5 சதவீதத்திலிருந்து 2005 இல் 4.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையேயாகும். குறிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிதியினை உருவாக்கும் நோக்கிலும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களின் கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்குமாக ஒரு சில வகையான பொருட்கள் செஸ்வரிக்கு உட்படுத்தப்பட்டன. நடைமுறையிலுள்ள தேயிலை, தெங்கு மற்றும் இறப்பர் ஏற்றுமதிகள் என்பவை மீதான செஸ்வரிக்கு மேலாக, 2005 இல் கறுவா ஏற்றுமதி மீதான செஸ்வரி ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டது.

- **2006 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 150,000 வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெறுவதற்கு 2006 வரவு செலவுத் திட்டமானது முன்மொழிந்துள்ளது.** தொழிலாளர்களின் பண அனுப்புதல்கள் நாட்டிற்கான வெளிநாட்டு மூல வளங்களில் பாரியதொரு மூலவளமாக இருப்பதால் மற்றைய நாடுகளுடன் கூடுதலான இருபுடை ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கான சாத்தியப்பாடுகளை அறிந்துகொள்ளவும் தாதித் தொழில், கப்பல்

தொழில் மற்றும் தகவல் தொழில்நட்பம் போன்ற பகுதிகளில் விசேடபயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்யவும் வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்துள்ளது. வெளிநாட்டில் வேலை செய்துவிட்டுத் திரும்பி வருபவர்களுக்கானதொரு ஊக்குவிப்பாக, அவர்கள் சுயதொழில் வாய்ப்புக்களை ஆரம்பிப்பதற்காக தொடர்ச்சியாக இரு வருடங்கள் வேலை செய்துவிட்டு இலங்கைக்குத் திரும்பிவரும்போது அவர்கள் வெளிநாட்டில் தங்கியிருந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு ஐ.அ.டொலர்கள் 5000 வரை தீர்வையற்ற படிகளை வழங்குவதற்கு அரசு முன்மொழிந்துள்ளது. அவர்கள் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து 6 மாத காலத்திற்குள் இந்தப் படிகளைப் பயன்படுத்துவதற்கு தகுதியுடையவர்களாவர்.

## 5.3 பொருட்களிலான வர்த்தகமும் வர்த்தக நிலுவையும்

- **உலகப் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியினால் நன்மையடைந்து மேலும் வெளிநாட்டுப் பொருளாதாரத்துடன் உள்நாட்டுப் பொருளாதாரம் ஒருங்கிணைக்கப்பட்டமை, தூண்டுதலளிக்கும் உள்நாட்டுக் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் அதிகரித்த உள்நாட்டுப்**

**அட்டவணை 5.3**

வர்த்தகச் சுட்டெண்கள்(அ)

1997=100

| வகை | 2004 பெறுமதிச் சுட்டெண் | 2004 அளவுச் சுட்டெண் | 2004 அலகு ஒன்றிற்கான விலைச் சுட்டெண் | 2005(ஆ) பெறுமதிச் சுட்டெண் | 2005(ஆ) அளவுச் சுட்டெண் | 2005(ஆ) அலகு ஒன்றிற்கான விலைச் சுட்டெண் | வளர்ச்சி வீதம் (ஆ) பெறுமதிச் சுட்டெண் | வளர்ச்சி வீதம் (ஆ) அளவுச் சுட்டெண் | வளர்ச்சி வீதம் (ஆ) அலகு ஒன்றிற்கான விலைச் சுட்டெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **100.3** | **112.9** | **88.8** | **108.6** | **116.1** | **93.5** | **8.3** | **2.9** | **5.3** |
| தேயிலை | 102.5 | 113.8 | 90.1 | 112.4 | 117.3 | 95.8 | 9.7 | 3.1 | 6.4 |
| இறப்பர் | 65.3 | 65.6 | 99.5 | 59.7 | 53.9 | 110.7 | -8.6 | -17.8 | 11.2 |
| தெங்கு | 96.1 | 112.8 | 85.2 | 96.3 | 102.3 | 94.1 | 0.2 | -9.3 | 10.5 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 111.7 | 134.6 | 83.0 | 126.5 | 155.6 | 81.3 | 13.3 | 15.6 | -2.0 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **130.9** | **135.4** | **96.7** | **143.7** | **145.4** | **98.9** | **9.8** | **7.4** | **2.3** |
| புடவைகளும் ஆடைகளும் | 123.2 | 127.7 | 96.5 | 127.0 | 134.4 | 94.5 | 3.0 | 5.3 | -2.1 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 102.3 | 59.4 | 172.1 | 134.5 | 54.4 | 247.4 | 31.5 | -8.5 | 43.7 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 149.8 | 158.9 | 94.3 | 180.3 | 177.1 | 101.8 | 20.3 | 11.5 | 8.0 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **134.2** | **96.1** | **139.7** | **160.4** | **115.5** | **138.8** | **19.5** | **20.3** | **-0.6** |
| இரத்தினக்கற்கள் | 130.7 | 96.2 | 135.8 | 144.9 | 115.7 | 125.3 | 10.9 | 20.2 | -7.8 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 181.5 | 94.5 | 192.1 | 365.0 | 114.1 | 319.8 | 101.1 | 20.8 | 66.5 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **123.9** | **129.4** | **95.7** | **136.5** | **138.0** | **98.9** | **10.2** | **6.7** | **3.3** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **132.9** | **158.4** | **83.9** | **138.6** | **159.8** | **86.7** | **4.3** | **0.9** | **3.4** |
| உணவும் குடிபானமும் | 92.8 | 102.5 | 90.6 | 95.2 | 101.3 | 94.0 | 2.5 | -1.2 | 3.8 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள | 191.1 | 239.5 | 79.8 | 201.7 | 244.9 | 82.4 | 5.6 | 2.3 | 3.2 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **149.2** | **135.7** | **110.0** | **168.7** | **139.3** | **121.1** | **13.1** | **2.7** | **10.1** |
| வளமாக்கி | 160.7 | 130.4 | 123.2 | 203.3 | 135.7 | 149.8 | 26.5 | 4.1 | 21.6 |
| மசகெண்ணெய் | 229.2 | 121.3 | 189.0 | 292.7 | 110.7 | 264.4 | 27.7 | -8.7 | 39.9 |
| ஏனைய பெற்றோலியம் | 219.3 | 110.3 | 198.9 | 320.4 | 132.5 | 241.8 | 46.1 | 20.1 | 21.6 |
| இரசாயனகூறுகளும் கலவைகளும் | 151.4 | 150.6 | 100.5 | 182.8 | 143.2 | 127.6 | 20.7 | -4.9 | 27.0 |
| கோதுமையும் மெசுலீனும் | 132.9 | 125.8 | 105.6 | 102.6 | 109.5 | 93.7 | -22.8 | -13.0 | -11.2 |
| புடவைகள் (ஆடைகள் உட்பட) | 109.2 | 125.0 | 87.4 | 110.4 | 131.8 | 83.8 | 1.1 | 5.5 | -4.1 |
| பிளாத்திக்கு | 166.2 | 159.0 | 104.5 | 201.7 | 176.3 | 114.4 | 21.4 | 10.9 | 9.5 |
| வைரங்கள் | 163.6 | 125.7 | 130.1 | 192.5 | 139.4 | 138.1 | 17.6 | 10.8 | 6.1 |
| ஏனையவை | 156.0 | 174.4 | 89.4 | 183.4 | 181.6 | 101.0 | 17.6 | 4.1 | 12.9 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **125.9** | **172.8** | **72.9** | **141.0** | **180.0** | **78.3** | **12.0** | **4.2** | **7.5** |
| கட்டட பொருட்கள் | 147.9 | 169.0 | 87.5 | 186.6 | 190.9 | 97.8 | 26.1 | 12.9 | 11.7 |
| போக்குவரத்துக் கருவிகள் | 123.3 | 93.7 | 131.6 | 156.3 | 104.8 | 149.2 | 26.8 | 11.8 | 13.4 |
| பொறிகளும் கருவிகளும் | 115.3 | 205.5 | 56.1 | 115.7 | 204.4 | 56.6 | 0.3 | -0.6 | 0.9 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 149.5 | 106.2 | 140.8 | 171.8 | 127.6 | 134.6 | 14.9 | 20.2 | -4.4 |
| **மொத்த இறக்குமதிகள்** | **136.4** | **148.8** | **91.7** | **151.1** | **152.8** | **98.9** | **10.8** | **2.7** | **7.8** |
| வர்த்தக மாற்று விகிதம் | | | 104.4 | | | 100.0 | | | -4.2 |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி.

**பொருளாதாரச் செயற்பாடுகள் என்பன காரணமாக 2005 இல் வெளிநாட்டு வர்த்தகம் ஆரோக்கியமானதொரு வளர்ச்சியைப் பதிவு செய்தது.** 2004 இல் பதிவு செய்யப்பட்ட 12.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் ஏற்றுமதி வருவாய்கள் 10.2 சதவீதத்தினால் ஐ.அ.டொலர்கள் 6,347 மில்லியனுக்கு வளர்ச்சியடைந்தது. இறக்குமதிகள் மீதான செலவினம் 2004 இன் 19.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் 10.8 சதவீதத்தினால் ஐ.அ.டொலர்கள் 8,863 மில்லியனுக்கு வளர்ச்சியடைந்தது. இது வர்த்தகப் பற்றாக்குறையினை ஐ.அ.டொலர் 2,516 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 274 மில்லியன்களால் விரிவடையச் செய்தது.

- **2005 இல் ஏற்றுமதி விலைகள் 3.3 சதவீதத்தினாலும் ஏற்றுமதி அளவுகள் 6.7 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தவேளை இறக்குமதி விலைகள் 7.8 சதவீதத்தினாலும் இறக்குமதி அளவு 2.7 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது.** வர்த்தக மாற்று விகிதம் 4.2 சதவீதத்தினால் குறைவடைந்தது. தரத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் பிரதான வாங்குனர்களிடமிருந்தான கேள்வி காரணமாக தேயிலை ஏற்றுமதி விலை அதிகரித்தது. பாகித்தான் மற்றும் மத்தியகிழக்கு நாடுகள் என்பவற்றிலிருந்து தேங்காய்த்துருவல், உலர்த்திய தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பனவற்றிற்கு ஏற்பட்ட உயர்ந்தளவான கேள்வியின் தூண்டுதலின் முக்கிய காரணமாக தெங்கிற்கான விலை முக்கியமாக அதிகரித்தது. உயர்வடைந்த சர்வதேச பெற்றோலிய விலைகளின் பலனாக செயற்கை இறப்பர் விலைகளுடன் இயற்கை இறப்பரின் விலைகளின் அதிகரிப்பு ஒரே அளவானதாக இருந்தது. 2005 இல் பல்நூலிழை உடன்படிக்கையின் முடிவுறுத்தல் காரணமாக ஏற்பட்ட தீவிர போட்டியினால் ஆடைகள் மற்றும் புடவைகளில் ஏற்பட்ட விலைக் குறைப்பின் தாக்கத்தினை இவ்வுற்பத்திகளின் விலை அதிகரிப்பு ஈடுசெய்யப் போதுமானதாக இருந்தது. இறக்குமதிகளின் விலைகள் அதிகரித்த பெற்றோலியம், வளமாக்கி, இரசாயனக் கலவைகள், கட்டிடப்பொருட்கள், போக்குவரத்துக் கருவிகள் மற்றும் நுகர்வுப்பொருட்கள் என்பவற்றின் உயர் விலையைப் பிரதிபலிக்கின்றது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

- **ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு கைத்தொழில் ஏற்றுமதிகளின் தொடர்ச்சியான ஆதிக்கத்தை எடுத்துக்காட்டியதுடன் அதனைத் தொடர்ந்து வேளாண்மை மற்றும் கனிப்பொருட்களின் ஏற்றுமதிகள் என்பன செல்வாக்குச் செலுத்தின.** கைத்தொழில் ஏற்றுமதிகள் 78 சதவீத பாரிய பங்குடனும் திரண்ட ஏற்றுமதி வளர்ச்சியில் 75 சதவீத பங்களிப்புடனும் 2005 இல் ஏற்றுமதி வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகித்தன. மொத்த ஏற்றுமதிகளில் வேளாண்மை ஏற்றுமதிகள் 18 சதவீதத்திற்கு வகைகூறிய 15 சதவீத வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்ததுடன் இதனைத் தொடர்ந்து கனிப்பொருட்களும் மற்றும் ஏனைய ஏற்றுமதிகளும் 2005 இன் ஏற்றுமதிகளில் 4 சதவீதத்திற்கு வகைகூறி, வளர்ச்சிக்கு 10 சதவீத பங்களிப்பைச் செய்தன.

- **2005 இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் 9.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், புடவைகளும் ஆடைகளும் மற்றும் உணவும் குடிபானங்களும் என்பவற்றின் செயலாற்றம் இவ்வளர்ச்சிக்கு உதவின. உயர்ந்த ஏற்றுமதி அளவுகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் ஆடைகள் மற்றும் புடவைகளின் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளில் 46 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 3.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான அளவுச்சுட்டெண் 5.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதேவேளை அலகுப் பெறுமதிச்சுட்டெண் 2.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மிகப்பெரிய கொள்வனவாளரான ஐக்கிய அமெரிக்காவிற்கான புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான ஏற்றுமதியானது 6.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சீனாவிலிருந்தான புடவைகள் ஏற்றுமதிகள் மீது ஐக்கியஅமெரிக்காவினால் விதிக்கப்பட்ட தடைகள் மற்றும் இலங்கையில் ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய புடவை வகைகளின் வளர்ச்சியடைந்துள்ள கேள்வி என்பன ஐக்கிய அமெரிக்காவில் இலங்கைக்கான சந்தைப்பங்கு அதிகரிப்பதற்கு உதவியது. ஆரம்ப விதிகளுடன் தொடர்பான பிரச்சனைகளின் காரணமாக பொதுமைப் படுத்தப்பட்ட முன்னுரிமைகள் முறைமை+ இன் கீழ் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் அடையப்பெறவில்லை. இரண்டாவது பாரிய சேரிடமான ஐரோப்பிய ஒன்றியத்திற்கான புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகள் 2005 இல் குறைந்தளவில் அதிகரித்தன. இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளுடன் நடைபெற்று வருவதுடன், இது எதிர் காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான

புடவை ஏற்றுமதிகளை விரிவுபடுத்தும். ஐ.அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றின் உறுதியான கேள்வி காரணமாக இறப்பர் ரயர்கள், ரியூப் மற்றும் மருத்துவக் கையுறைகள் என்பனவற்றின் ஏற்றுமதிகள் 2005 இல் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தன. வளர்ச்சியடையும் உலக கேள்வியின் காரணமாக இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் மற்றும் வைரம் என்பனவற்றின் ஏற்றுமதிகள் 2005 இல் ஆரோக்கியமான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. 2005 ஒகத்து 1 இலிருந்து இரத்தினக் கற்கள், வைரம் மற்றும் விலையுயர்ந்த உலோகங்கள் என்பன இறக்குமதி மற்றும் வர்த்தகம் மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி விலக்கப்பட்டமையினால் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் நன்மைகளைப் பெற்றுக் கொண்டன.

- **2005 இல் வேளாண்மை ஏற்றுமதிகள் 2.9 சதவீதமான அளவு வளர்ச்சி மற்றும் 5.3 சதவீதமானதொரு விலை அதிகரிப்பு என்பனவற்றின் பிரதிபலிப்புக் காரணமாக 8.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** இவ்வளர்ச்சி முக்கியமாக தேயிலையின் வலுவான செயலாற்றத்தினால் பெறப்பட்டது. தேயிலை ஏற்றுமதி அளவு சாதனைமிக்க 309 மில்லியன் கிலோகிறாம்களாக விளங்கி உயர் விலைகளைப் பெற்றன. 2005 இல் ருசியா மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 19 சதவீதப் பங்குடன் மிகப் பெரிய வாங்குனராக தொடர்ந்திருந்ததுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்சும், சிரியாவும் காணப்பட்டன. மற்றைய பிரதான சந்தைகளாக ஈரான், துருக்கி, ஜோர்தான் மற்றும் சவுதிஅரேபியா என்பன விளங்கின. குறைந்தளவான தெங்கு அறுவடைகாரணமாக தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி

**அட்டவணை 5.4**
ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு

| வகை | 2004 பெறுமதி ஐ.அ.டொ. மில் | 2004 பங்கு % | 2005 (அ) பெறுமதி ஐ.அ.டொ. மில் | 2005 (அ) பங்கு % | பெறுமதியில் மாற்றம்(அ) ஐ.அ.டொ. மில் | வளர்ச்சி வீதம் % (அ) | வளர்ச்சிக்கான பங்களிப்பு % (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **1065.2** | **18.5** | **1153.8** | **18.2** | **88.6** | **8.3** | **15.0** |
| தேயிலை | 738.9 | 12.8 | 810.2 | 12.8 | 71.3 | 9.6 | 12.1 |
| இறப்பர் | 51.3 | 0.9 | 46.9 | 0.7 | -4.4 | -8.6 | -0.7 |
| தெங்கு | 113.1 | 2.0 | 113.3 | 1.8 | 0.2 | 0.2 | 0.0 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 58.6 | 1.0 | 48.8 | 0.8 | -9.8 | -16.7 | -1.7 |
| ஏனையவை | 54.5 | 0.9 | 64.5 | 1.0 | 10.0 | 18.3 | 1.7 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 161.9 | 2.8 | 183.4 | 2.9 | 21.5 | 13.3 | 3.6 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **4506.1** | **78.3** | **4948.4** | **78.0** | **442.3** | **9.8** | **75.0** |
| உணவு, குடிபானம், புகையிலை | 175.1 | 3.0 | 318.2 | 5.0 | 143.1 | 81.7 | 24.3 |
| புடவைகளும் ஆடைகளும் | 2808.9 | 48.8 | 2894.6 | 45.6 | 85.7 | 3.1 | 14.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 99.6 | 1.7 | 130.9 | 2.1 | 31.3 | 31.4 | 5.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 282.9 | 4.9 | 394.4 | 6.2 | 111.5 | 39.4 | 18.9 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 46.8 | 0.8 | 47.1 | 0.7 | 0.3 | 0.6 | 0.1 |
| தோல், பயணப்பொருட்கள் காலணியும் | 42.6 | 0.7 | 43.8 | 0.7 | 1.2 | 2.8 | 0.2 |
| பொறிகளும் கருவிகளும் | 385.7 | 6.7 | 329.9 | 5.2 | -55.8 | -14.5 | -9.5 |
| வைரங்களும் ஆபரணங்களும் | 265.3 | 4.6 | 277.9 | 4.4 | 12.6 | 4.7 | 2.1 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 399.2 | 6.9 | 511.7 | 8.1 | 112.5 | 28.2 | 19.1 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **120.0** | **2.1** | **143.3** | **2.3** | **23.3** | **19.4** | **4.0** |
| இரத்தினக் கற்கள் | 108.5 | 1.9 | 120.3 | 1.9 | 11.8 | 10.9 | 2.0 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 11.5 | 0.2 | 23.0 | 0.4 | 11.5 | 100.0 | 2.0 |
| **பாகுபடுத்தப்படாதவை (ஆ)** | **66.0** | **1.1** | **101.2** | **1.6** | **35.2** | **53.3** | **6.0** |
| **மொத்த ஏற்றுமதிகள் (இ)** | **5757.2** | **100.0** | **6346.7** | **100.0** | **589.4** | **10.2** | **100.0** |
| ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் | 101.19 | | 100.50 | | | | |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) மீள் ஏற்றுமதிகள் உட்பட.
(இ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி.
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை

**வரைபடம் 5.3**
**முக்கிய வகைகளின் படி ஏற்றுமதிகளின் பங்கு**




வருவாய்கள் 0.2 சதவீதமான குறைந்தளவான அதிகரிப்பைக் காட்டியது. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களினால் இலங்கை இறப்பர் உள்நாட்டில் அதிகளவு நுகரப்பட்டமையே 2005 இல் இயற்கை இறப்பரின் ஏற்றுமதிகள் 8.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடையக் காரணமாயிற்று. பெற்றோலியம் மற்றும் செயற்கை இறப்பரின் உயர்விலை காரணமாக இயற்கை இறப்பரின் சர்வதேச விலை தொடர்ச்சியாக அதிகரித்தது. எதிர்காலத்திலும் தொடர்ந்தும் உயர்வாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. காய்கறிகள், மிளகு, கறுவா மற்றும் கராம்பு ஆகியவற்றின் உயர்ந்தளவிலான ஏற்றுமதிகளின் பிரதிபலிப்பாக 2005 இல் சிறு வேளாண்மைகளின் ஏற்றுமதிகள் 13.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் சுங்கத் தீர்வையற்ற நுழைவு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வி என்பன மூலம் இவ்வுற்பத்திகளுக்கான வெளிநாட்டுக் கேள்வி தூண்டுதலடைந்தது.

- **ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய பாதுகாப்பு நியமம் தேயிலை ஏற்றுமதிகளுக்கானதொரு கரிசனைக்குரிய விடயமாகத் தொடர்ந்தும் காணப்படுகிறது.** 2006 சனவரியிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தீங்கிழைக்கும் பொருட்களின் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கியமான கட்டுப்பாட்டு புள்ளியானது ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் நுழைகின்ற அனைத்து உணவு உற்பத்திச் செய்முறைகள் தொடர்பான உணவுப் பாதுகாப்பு நியமங்களை அனைத்துத் தேயிலை தொழிற்சாலைகளும் பின்பற்ற வேண்டுமெனக் கோரியது. தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளினால் விதிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்புத் நியமத்தினைப் பெறுவதற்கு இலங்கையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு உதவுவதற்காக இலங்கைத் தேயிலைச் சபையானது பலதரப்பட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றது. ஆயினும், இந்தத் தராதரத்தை நாடுகள் நிறைவேற்றுவதற்கு ஐரோப்பிய ஒன்றியமானது 2006 யூன்வரை 6 மாத கால சலுகைக் காலத்தை வழங்கியுள்ளது. இலங்கையிலுள்ள சில தேயிலை தயாரிக்கும் மற்றும் ஏற்றுமதிக்கம்பனிகள் ஏற்கனவே இந் நியமங்களைப் பெற்றுள்ளதுடன் மற்றைய பல கம்பனிகள் 2006 இறுதியில் முன் தீங்கிளைக்கும் பொருட்களின் பகுப்பாய்வு மற்றும் கட்டுப்பாட்டு புள்ளி நியம முறையினை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளன. மீதியாகவுள்ள கம்பனிகளும் இந் நியமங்களைப் பெறுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- **2005 இல் கனிப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருமானம் 19.5 சதவீதத்தினால் அதிகரித்து கனிப்பொருள் ஏற்றுமதிகளில் 84 சதவீதத்திற்கு வகைகூறும் இரத்தினக் கற்களின் உயர்ந்தளவிலான ஏற்றுமதியைப் பிரதிபலிக்கின்றது.** இலங்கை தரம் கூடிய நீல மாணிக்கக் கற்களை உலகச் சந்தைக்கு விநியோகிக்கும் மிகப்பெரிய விநியோகத்தராக தொடர்ந்தும் விளங்கியது. "இலங்கை நீல மாணிக்கக் கற்கள்" எனும் வணிகப் பெயரின் கீழ் இலங்கையினால் ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரே வகையான சிறப்பம்சங்களைக் கொண்ட நீல மாணிக்கக்கற்களை மேம்படுத்துவதற்காக இலங்கை

அரசாங்கம் பலதரப்பட்ட முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. 2005 இல் ஐக்கிய அமெரிக்கா இலங்கை மாணிக்கக் கற்களின் மிகப் பெரிய வாங்குனராகவும் அதனைத் தொடர்ந்து தாய்லாந்து மற்றும் சுவிற்சர்லாந்து என்பனவும் விளங்கின.

## இறக்குமதிச் செயலாற்றம்

- **கேள்வி மற்றும் உயர்ந்தளவான இறக்குமதி விலைகள் ஆகிய இரண்டினதும் அதிகரிப்பின் பலனாக 2005 இல் இறக்குமதிகள் 10.8 சதவீதத்தினால் ஐ.அ.டொலர்கள் 8,863 மில்லியன்களுக்கு வளர்ச்சியடைந்தன.** நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டமை, சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டமைப்புப் பணிகள், நாணய மாற்று வீத பெறுமான அதிகரிப்பு மற்றும் தாழ்ந்த வட்டிவீத அமைப்பு என்பன மூன்று வகையான இறக்குமதிகளினதும் அதாவது இடைநிலை, முதலீடு மற்றும் நுகர்வுப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிக் கேள்வியை உயர்த்தின.
- **2005 இல் பிரதானமாக பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் துணிவகைகள் என்பன காரணமாக இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 14.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** 2005 இல் மசகெண்ணெய் விலைகளின் 36.9 சதவீத உயர்வு காரணமாக மொத்த இறக்குமதிகளில் 19 சதவீதத்திற்கு வகைகூறிய பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவுகள் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 1,655 மில்லியன்களுக்கு 36.9 சதவீதத்தினால் அதிகரித்தன. பீப்பா ஒன்றிற்கான மசகுஎண்ணெய் விலை, 2003 இல் ஐ.அ.டொலர்கள் 29.46 ஆக இருந்து 2004 இல் 37.48 ஐ.அ.டொலர்களுக்கு அதிகரித்ததுடன் 2005 இல் மேலும் ஐ.அ.டொலர்கள் 52.39 ஆக அதிகரித்தது. 2005 இல் வழமையான அரையாண்டுப் பேணல்காரணமாக பெற்றோலியச் சுத்திகாரிப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டதன் பிரதான காரணமாக மசகுஎண்ணெய் இறக்குமதிகளின் அளவு 8.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தபோதும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி அளவு 2005 இல் 10.8 சதவீதத்தினால் அதிகரித்தது. 2004 இல் பதிவு செய்யப்பட்ட 16.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெற்றோலியம் தவிர்ந்த மொத்த இறக்குமதிகள் 2005 இல் 6 சதவீதத்தினால் அதிகரித்தன. இரசாயன உற்பத்திகளுக்குப் பயன்படும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியில் பயன்படுத்தப்படும் இரசாயன உற்பத்திகள், வைரம், ஆபரணம், கடதாசி மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளும் 2005 இல் அதிகரித்தன.
- **குறிப்பாக 2005 இன் இரண்டாவது அரைப் பகுதியில் முதலீட்டாளர் நம்பிக்கையின் பிரதிபலிப்பு காரணமாக அண்மைய ஆண்டுகளில் தொடர்ச்சியானதொரு விரிவாக்கத்தைப் பதிவுசெய்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 2005 இல் மேலும் 12 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** கட்டடப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பவற்றின் உயர்ந்தளவிலான இறக்குமதிகளினால் முதலீட்டுப் பொருட்களின் வளர்ச்சி பிரதானமாக தூண்டப்பட்டது. சுனாமிக்குப் பின்னரான

**வரைபடம் 5.4**
**முக்கிய வகையின் படி இறக்குமதிகளின் பங்கு**



**அட்டவணை 5.5**
**இறக்குமதிகளின் உள்ளமைப்பு**

| வகை | 2004 பெறுமதி ஐ.அ.டொ. மில் | 2004 பங்கு % | 2005(அ) பெறுமதி ஐ.அ.டொ. மில் | 2005(அ) பங்கு % | பெறுமதியில் மாற்றம்(அ) ஐ.அ.டொ. மில் | வளர்ச்சி வீதம்(அ) % | வளர்ச்சிக்கான பங்களிப்பு(அ) % |
|---|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **1,623.5** | **20.3** | **1,643.9** | **18.5** | **20.5** | **1.3** | **2.4** |
| உணவும் குடிபானமும் | 779.1 | 9.7 | 752.6 | 8.5 | -26.5 | -3.4 | -3.1 |
| அரிசி | 59.4 | 0.7 | 15.6 | 0.2 | -43.8 | -73.8 | -5.1 |
| சீனி | 111.4 | 1.4 | 132.3 | 1.5 | 20.8 | 18.7 | 2.4 |
| கோதுமை | 183.1 | 2.3 | 141.4 | 1.6 | -41.7 | -22.8 | -4.8 |
| ஏனையவை | 425.2 | 5.3 | 463.3 | 5.2 | 38.2 | 9.0 | 4.4 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 844.4 | 10.6 | 891.4 | 10.1 | 46.9 | 5.6 | 5.4 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **4,645.4** | **58.1** | **5,317.1** | **60.0** | **671.8** | **14.5** | **77.8** |
| பெற்றோலியம் | 1,209.3 | 15.1 | 1,655.3 | 18.7 | 445.9 | 36.9 | 51.6 |
| வளமாக்கி | 106.7 | 1.3 | 135.0 | 1.5 | 28.3 | 26.5 | 3.3 |
| இரசாயனங்கள் | 205.9 | 2.6 | 248.6 | 2.8 | 42.7 | 20.7 | 4.9 |
| புடவைகளும் ஆடைகளும் | 1,514.1 | 18.9 | 1,531.0 | 17.3 | 16.9 | 1.1 | 2.0 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,609.4 | 20.1 | 1,747.3 | 19.7 | 137.9 | 8.6 | 16.0 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **1,669.9** | **20.9** | **1,869.6** | **21.1** | **199.7** | **12.0** | **23.1** |
| பொறியும் கருவியும் | 857.4 | 10.7 | 860.4 | 9.7 | 3.0 | 0.3 | 0.3 |
| போக்குவரத்துக் கருவி | 256.6 | 3.2 | 325.3 | 3.7 | 68.7 | 26.8 | 8.0 |
| கட்டடப் பொருட்கள் | 402.0 | 5.0 | 507.0 | 5.7 | 105.0 | 26.1 | 12.2 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 153.9 | 1.9 | 176.9 | 2.0 | 23.0 | 14.9 | 2.7 |
| **4. பகுக்கப்படாத இறக்குமதிகள்** | **61.1** | **0.8** | **32.6** | **0.4** | **-28.5** | **-46.7** | **-3.3** |
| மொத்த இறக்குமதிகள் (ஆ) | 7,999.8 | 100.0 | 8,863.2 | 100.0 | 863.4 | 10.8 | 100.0 |
| ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் | 101.19 | | 100.50 | | | | |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
இலங்கை மத்திய வங்கி.
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

கட்டுமானப் பணிகள், அரச உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் மற்றும் வணிக மற்றும் வதிவிடக் கட்டடங்களின் கட்டுமானம் என்பவை காரணமாக சீமெந்து, இரும்பு மற்றும் அலுமினியப் பொருட்கள், கல்நார்த்தகடுகள், அரியப்பட்ட மரம் மற்றும் மரப்பொருள் மற்றும் மின்னியல் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிகளுக்கான கேள்வி அதிகரித்தது.

- **2004 இல் நிலவிய அதே போக்கின் தொடர்ச்சியாக நுகர்வுப் பொருட்களின் பங்கு சென்ற ஆண்டில் 20 சதவீதத்திலிருந்து 2005 இல் 19 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்த அதேவேளை நாட்டின் முதலீடு மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளின் வளர்ச்சி காரணமாக 2005 இல் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் பங்கு முறையே 60 சதவீதம் மற்றும் 21 சதவீதத்திற்கு அதிகரித்தது.** கடந்த ஆண்டின் 10 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் நுகர்வுப் பொருட்கள் மீதான செலவுகள் ஐ.அ.டொலர்கள் 1,644 மில்லியன்களுக்கு 1.3 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்தது. உயர்ந்தளவிலான நெல் அறுவடை இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டமைக்கான காரணமாக அமைந்தது. பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட கலால் வரிகளின் அதிகரிப்பு மற்றும் 2004 இல் நாணயக் கடிதங்கள் ஆகக் குறைந்தது 100 சதவீத காசு எல்லை அறிமுகப்படுத்தப்பட்டமை என்பன காரணமாக 2005 இல் சொந்தப் பாவனைக்கான ஊர்திகளின் இறக்குமதிகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

## வர்த்தகத்தின் போக்கு

- **2005 இல் வர்த்தகத்தின் போக்கு சிறிதளவில் மட்டுமே மாற்றமடைந்துள்ளது.** மேற்கத்திய நாடுகள் பாரிய ஏற்றுமதிச் சேரிடங்களாகவும் ஆசிய நாடுகள் பாரிய இறக்குமதி வழங்குனர்களாகவும் இருந்தன. 2004 இல் 32 சதவீதமாகவிருந்த இதன் பங்கு 2005 இல் 31 சதவீதமாக வீழ்ச்சியடைந்

அட்டவணை 5.6
முக்கிய இறக்குமதிகளின் அளவுகள் (அ)

'000 மெற்றிக் தொன்

| விடயம் | 2001 | 2002 | 2003 | 2004(ஆ) | 2005(இ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **52** | **95** | **35** | **222** | **52** |
| 1ஆம் காலாண்டு | 3 | 51 | 22 | 9 | 43 |
| 2ஆம் காலாண்டு | 7 | 9 | 9 | 9 | 4 |
| 3ஆம் காலாண்டு | 2 | 10 | 2 | 4 | 2 |
| 4ஆம் காலாண்டு | 40 | 25 | 2 | 200 | 3 |
| **கோதுமை** | **760** | **993** | **919** | **993** | **864** |
| 1ஆம் காலாண்டு | 231 | 309 | 262 | 257 | 272 |
| 2ஆம் காலாண்டு | 229 | 215 | 232 | 218 | 191 |
| 3ஆம் காலாண்டு | 177 | 221 | 217 | 189 | 174 |
| 4ஆம் காலாண்டு | 123 | 248 | 208 | 329 | 227 |
| **சீனி** | **420** | **554** | **509** | **438** | **418** |
| 1ஆம் காலாண்டு | 100 | 146 | 151 | 98 | 49 |
| 2ஆம் காலாண்டு | 127 | 141 | 135 | 173 | 167 |
| 3ஆம் காலாண்டு | 109 | 110 | 104 | 71 | 94 |
| 4ஆம் காலாண்டு | 84 | 157 | 119 | 96 | 108 |
| **பெற்றோலியம் (மசகெண்ணெய்)** | **1,954** | **2,300** | **1,995** | **2,200** | **2,008** |
| 1ஆம் காலாண்டு | 237 | 539 | 382 | 586 | 586 |
| 2ஆம் காலாண்டு | 539 | 513 | 466 | 464 | 581 |
| 3ஆம் காலாண்டு | 624 | 593 | 500 | 634 | 246 |
| 4ஆம் காலாண்டு | 554 | 655 | 647 | 516 | 595 |
| **தூய்மையாக்கப்பட்ட பெற்றோலியம்** | **1,420** | **1,348** | **1,168** | **1,645** | **1,823** |
| 1ஆம் காலாண்டு | 537 | 276 | 340 | 460 | 314 |
| 2ஆம் காலாண்டு | 419 | 426 | 239 | 380 | 396 |
| 3ஆம் காலாண்டு | 224 | 266 | 317 | 241 | 711 |
| 4ஆம் காலாண்டு | 240 | 380 | 272 | 464 | 402 |
| **புடவையும் ஆடையும்** | **234** | **244** | **253** | **257** | **266** |
| 1ஆம் காலாண்டு | 60 | 57 | 61 | 58 | 56 |
| 2ஆம் காலாண்டு | 63 | 65 | 65 | 66 | 68 |
| 3ஆம் காலாண்டு | 52 | 61 | 58 | 66 | 73 |
| 4ஆம் காலாண்டு | 59 | 61 | 68 | 66 | 70 |
| **வளமாக்கி** | **460** | **537** | **514** | **510** | **529** |
| 1ஆம் காலாண்டு | 66 | 103 | 124 | 54 | 168 |
| 2ஆம் காலாண்டு | 183 | 163 | 166 | 164 | 111 |
| 3ஆம் காலாண்டு | 83 | 138 | 49 | 76 | 142 |
| 4ஆம் காலாண்டு | 128 | 133 | 175 | 216 | 107 |

(அ) சீராக்கப்பட்டது. மூலங்கள்:இலங்கைச் சுங்கம்.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
(இ) தற்காலிகமானவை. வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

துள்ளபோதும், ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சேரிடமாக விளங்குகிறது. ஐக்கிய இராச்சியம் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான இரண்டாவது மிகப்பெரிய சேரிடமாக தொடர்ந்து விளங்கியது. 2005 இல் ஐக்கிய இராச்சியத்திற்கான மொத்த ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர்கள் 778 மில்லியன்களாக தொடர்ந்தும்மாறாதிருந்த போதிலும் ஏற்றுமதிகளின் பங்கு 2004 இல் 14 சதவீதத்திலிருந்து 2005 இல் 12 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலிருந்து நன்மைகளைப் பெற்றதன் மூலம் 2005 இல் இந்தியாவுடனான வர்த்தகம் 44.4 சதவீதத்தினால் பாரியளவில் அதிகரித்தது. சுத்திகரிக்கப்பட்ட செம்பு, மின்வலு கடத்திகள், கழிவு மற்றும் துண்டாக்கப்பட்ட உலோகக் கலப்பு உருக்கு, கராம்பு, தேங்காய்த்துருவல் மற்றும் மரக்கறி எண்ணெய் என்பனவற்றின் உயர்ந்தளவான ஏற்றுமதிகளின் பிரதிபலிப்பினால் 2004 இல் 7 சதவீதமாகவிருந்த இந்தியச் சந்தைக்கான ஏற்றுமதிப்பங்கு 2005 இல் 9 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2005 ஆம் ஆண்டில் இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதிலிருந்து இந்தியா முக்கியமானதொரு வர்த்தக பங்காளராக உருவானது. 2000 ஆம் ஆண்டில் 16 ஆவது இடத்திலிருந்த இந்தியா தற்போது இலங்கையின் நான்காவது மிகப்பெரிய ஏற்றுமதிச் சேரிடமாக உருவெடுத்துள்ளது. 2004 இன் ஐ.அ.டொலர்கள் 1.8 பில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2005 இல் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான இருவழி வர்த்தகம் மேலும் ஐ.அ.டொலர்கள் 2.4 பில்லியன்களாக விரிவடைந்துள்ளது.

- **இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான பிரதான சேரிடங்களாக சேர்மனி, பெல்ஜியம், லக்சம்பேர்க், இத்தாலி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ருசியா மற்றும் யப்பான் என்பன விளங்கின.** 2005இல் சேர்மனி, பெல்ஜியம், லக்சம்பேர்க் மற்றும் இத்தாலி என்பவற்றிற்கான ஏற்றுமதிகள் அதிகரித்த அதேவேளை யப்பானுக்கான ஏற்றுமதிகள் குறைவடைந்தது. சேர்மனிக்கான பிரதான ஏற்றுமதிகளாக புடவைகள், தேயிலை, திண்ம ரயர்கள், கராம்பு மற்றும் தென்னம் தும்பு உற்பத்திகள் என்பன விளங்கின. வைரக்கல் மற்றும் புடவைகள் பெல்ஜியம்-லக்சம்பேர்க்கிற்கான பிரதான ஏற்றுமதிகளாகவிருந்தன. விலையுயர்ந்த கற்கள், கராம்பு, ரயர்கள், தெங்கு துணை உற்பத்திகள், இறால் மற்றும் மீன் உற்பத்திகள் மற்றும் சிலைகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் என்பன ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய பிரதான பொருட்களாகும்.

- **ஒரு பிராந்தியமாக நோக்குகையில் ஆசிய நாடுகள் இறக்குமதிகளுக்கான பிரதான மூலகமாகத் தொடர்ந்து இருந்ததுடன் 2005 இல் 16 சதவீதமானதொரு வளர்ச்சியைப் பதிவு செய்தன.** ஆசிய நாடுகளுக்கான சந்தைப்பங்கு 2004 இல் 57 சதவீதமாக இருந்து 2005 இல் 60 சதவீதமாக

**வரைபடம் 5.5**
**வர்த்தகத்தின் போக்கு**




அதிகரித்தது. இந்தியா இறக்குமதி களுக்கான மிகப்பெரிய (21 சதவீதம்) மூலமாகவும், அதனைத் தொடர்ந்து கொங்கொங் உள்ளடக்கிய சீனா (14 சதவீதம்), சிங்கப்பூர் (8 சதவீதம்) மற்றும் ஈரான் (5 சதவீதம்) என்பனவும் காணப்பட்டன. இந்தியாவுடனான இறக்குமதிகள் 2005 இல் 28 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் முக்கிய இறக்கு மதிகளாக மருந்தாக்கற் பொருட்கள், கோதுமை, அரிசி, போக்குவரத்து ஊர்திகள் மற்றும் பருத்திநூல் என்பன விளங்கின.

## 5.4 பணிகளிலான வர்த்தகம், வருமானம், மாற்றல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை

- ***பணிகளுக்கான வர்த்தகத்தில் போக்குவரத்து மற்றும் பயணப்பணிகள் என்பன ஆதிக்கம் செலுத்திய வேளையில் வெளியிலிருந்து மூலவளப் பணிகளைப் பெற்றுக் கொள்ளும் வியாபாரச் செயல்முறைகளை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்பத் தொலைத்தொடர்பூட்டல், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதிப் பணிகள் என்பன முக்கிய துறைகளாக தோற்றம் பெற்றுள்ளன.*** *பிரதானமாக சுற்றுலாத் துறையின் வருவாய் களிலிருந்தான குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி மற்றும் போக்குவரத்து மற்றும் பயணம் மீதான உயர்ந்தளவான செலவுகள் காரணமாக 2005 இல் பணிகள் கணக்கின் மிகை ஐ.அ.டொலர்கள் 338 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 19.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.*

### போக்குவரத்துப் பணிகளிலான வர்த்தகம்

- ***2005 இல் பயணிகள் கட்டணம் கப்பற் சரக்குக் கட்டணங்கள் மற்றும் துறைமுகங்களுடன் தொடர்பான வருவாய்கள் என்பவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகளிலிருந்தான உட் பாய்ச்சல்கள் ஏறத்தாழ 7.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சரக்கு மாற்றிக் கப்பல் ஏற்றலினால் ஏற்பட்ட துறைமுகம் தொடர்பான செயற்பாடுகள் பிரதான காரணமாக அமைந்தன.*** *சரக்கு மாற்றிக் கப்பல் ஏற்றல் கையாள்கையானது பன்னாட்டு வியாபார விரிவாக்கம் காரணமாக 10.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் குறிப்பாக இலங்கையிலிருந்தான சரக்கு மாற்றி கப்பலேற்றுதலுக்கான பிரதானமானதொரு சேர்விடமான இந்தியாவின் துரித வளர்ச்சியே இதற்கு காரணமாகும். ஆயினும், கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தித் திட்டம் போன்ற உத்தேசிக்கப்பட்ட துறைமுக அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதன் மூலம் ஒப்பீட்டு நலன்களை உறுதிப்படுத்தி வேகமாக நகர்ந்தாலொழிய, சேது சமுத்திரக் கால்வாயின் நிர்மாணம் மற்றும் இந்தியாவின் பல்வேறு துறைமுகங்களின் துரித அபிவிருத்தி என்பன இலங்கையின் துறைமுகங்கள் தொடர்பான செயற்பாடுகளின் போட்டியினை தீவிரப் படுத்தக்கூடிய நிலைமையை உருவாக்கும். அதே நேரம் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்த இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை மற்றும் துறைமுகம் தொடர்பான பணிகளின் கொடுப்பனவுகள் அதிகரித்தமை என்பவற்றின் பிரதிபலிப்பினால் போக்குவரத்துப் பணிகள் தொடர்பான வெளிப்பாய்ச்சல்கள் 13.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளன. இவ்வகையான அபிவிருத்திகளினால் 2005 இல், போக்குவரத்துப் பணிகளிலிருந்தான தேறிய வருவாய்ககள்*

ஏறத்தாழ ஐ.அ.டொலர்கள் 204 மில்லியன்களுக்கு 2.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளன.

## பயணம் மற்றும் சுற்றுலா

- **சுனாமி பேரழிவு காரணமாக 2005 இல் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் பின்னடைவொன்றை எதிர்நோக்கியது.** 2004 இல் ஏறத்தாழ 566,000 ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்த சுற்றுலா வருகைகளின் எண்ணிக்கை 2005 இல் ஏறத்தாழ 549,000 இற்கு 3.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. அறைகளில் தங்கியிருக்கும் அளவு வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 2005 இல் சுற்றுலாத் துறையிலிருந்தான மொத்த வருவாய்கள் ஐ.அ.டொலர்கள் 329 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 20.3 சதவீதத்தினால் உயர்ந்தளவானதொரு வீதத்தில் வீழ்ச்சியடைந்தது. உதவி வேலையாட்களின் உட்பாய்ச்சல்கள் மற்றும் இந்தியா மற்றும் பாகித்தானிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை என்பன உயர்வடைந்திருந்த போதிலும் தரப்படுத்தப்பட்ட சுற்றுலா விடுதிகளில் அவர்களது தங்குகை குறிப்பிடத்தக்களவில் இருக்கவில்லை. வதிவற்ற இலங்கையர்களின் வருகைகளால் ஏற்படும் உள்ளடக்கிய வருவாய்களை உள்ளடக்கிய மொத்த வருவாய்கள் ஐ.அ.டொலர்கள் 429 மில்லியன்களுக்கு 16.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2005 இல் கூடுதலான இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு பயணம் செய்ததன் விளைவாக பயணம் மீதான இலங்கையர்களின் செலவு ஐ.அ.டொலர்கள் 314 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 6.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

- **2005 இல் இந்தியா, இலங்கையின் மிகப்பெரிய தனிஒரு சுற்றுலாப் பயணிகளின் மூலமாக உருவெடுத்ததுடன் 7.8 சதவீதமானதொரு வளர்ச்சியைப் பதிவு செய்தது.** மொத்த வருகைகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தான வருகைகள் 2004 இல் இவற்றின் பங்கான 50.2 சதவீதத்திலிருந்து 41.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதிலும். 2005 இல் மேற்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் தொடர்ந்தும் இலங்கையின் பிரதான சுற்றுலா உருவாக்க சந்தைகளாக இருந்ததுடன் சுனாமிப் பேரழிவு மற்றும் தொடர்புடைய மிக மோசமான பிரசாரங்கள் ஆண்டின் இறுதிப்பகுதியில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் போர் நடவடிக்கைகள் அதிகரித்தமை என்பவற்றின் பயனாக இப் பிராந்தியத்திலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 20.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தன. சுனாமி நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு என்பவை தொடர்பாக பெரும் எண்ணிக்கையிலான தொண்டர்கள் வட அமெரிக்காவிலிருந்து வருகை தந்தமையின் காரணமாக 2005 இல் வட அமெரிக்காவிலிருந்தான வருகைகள் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பைப் பதிவு செய்தன. ஆசியா மிகப்பெரியதொரு சுற்றுலா உருவாக்கச் சேரிடமாக உருவெடுத்ததுடன், 40.7 சதவீதத்திற்கு வகைகூறி 12.8 சதவீதமானதொரு வளர்ச்சியைப் பதிவு செய்தது. உயர்ந்தளவிலான செலவு செய்யும் இயலளவுடன் கூடிய கூடுதலான உல்லாசப் பயணிகளைக்கவரும் நோக்குடன் இலங்கைச் சுற்றுலாச்சபையானது விசேடமானதொரு பன்னாட்டு மேம்படுத்தல் பிரச்சாரத்தில் ஈடுபடத் திட்டமிட்டிருப்பதால் இது 2006 இல் சுற்றுலாத் துறையிலிருந்தான அந்நியச் செலாவணி வருவாய்களை அதிகரிப்பதற்கு உதவும்.

**அட்டவணை 5.7**
**தேறிய பணிகளும் வருமானமும் மாற்றல்களும் (அ)**

| விடயம் | ஐ.அ.டொ.மில்லியன் 2004 | ஐ.அ.டொ.மில்லியன் 2005 (ஆ) | ரூபா மில்லியன் 2004 | ரூபா மில்லியன் 2005 (ஆ) |
|---|---|---|---|---|
| 1.போக்குவரத்து | 209 | 204 | 21,201 | 20,452 |
| 2.பயணம் | 217 | 115 | 22,232 | 11,553 |
| 3.தொடர்பூட்டல் பணிகள் | 33 | 25 | 3,304 | 2,503 |
| 4.கணனி தகவல் தொழில் நுட்பப் பணிகள் | 72 | 82 | 7,286 | 8,371 |
| 5.கட்டடவாக்கப் பணிகள் | 20 | 24 | 2,012 | 2,396 |
| 6.காப்புறுதிப் பணிகள் | 20 | 39 | 2,024 | 3,890 |
| 7.ஏனைய வியாபாரப்பணிகள் | -137 | -134 | -13,798 | -13,513 |
| 8.அரச செலவினம் வே.எ.கு. | -15 | -16 | -1,527 | -1,607 |
| மொத்தப் பணிகள் | 419 | 338 | 42,735 | 34,043 |
| 1.ஊழியர்களின் இழப்பீடு | -6 | -9 | -601 | -940 |
| 2.நேரடி முதலீடு | -92 | -112 | -9,303 | -11,245 |
| 3. வட்டியும் ஏனைய கட்டணங்களும் | -106 | -178 | -10,828 | -17,864 |
| மொத்த வருமானம் | -204 | -299 | -20,732 | -30,049 |
| 1. தனியார் | 1,350 | 1,736 | 136,672 | 174,542 |
| 2. பொது அரசு | 30 | 93 | 3,038 | 9,300 |
| மொத்த நடைமுறை மாற்றல்கள் | 1,380 | 1,828 | 139,710 | 183,842 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விளக்கம் ப.நா.நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ம் பதிப்புடன் (1993) சாத்தியமானஅளவுக்கு இணங்கிச் செல்கின்றது.
(ஆ) தற்காலிகம்

**வரைபடம் 5.6**
**மாதாந்த சுற்றுலா வருகைகள்**




- **இலங்கையின் சுற்றுலாத்துறை உள்ளார்ந்த வளம் இன்னும் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை.** 2005 இல் ஏறத்தாழ 9 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளமையானது சிங்கப்பூருடன், ஒப்பிடுகையில் 2005 இல் இலங்கை 549,000 சுற்றுலாப் பயணிகளை மட்டுமே கவர்ந்துள்ளது. இலங்கை சூழல்சார் இயற்கை அமைப்புக்கள் மற்றும் பாரம்பரிய பண்பாட்டு அமைவிடல் போன்ற பலதரப்பிட கவர்ச்சிகளைக் கொண்டிருந்தபோதும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. இத்துறையில் தனியார் துறையினர் பிரதான பங்காளராக இருப்பதனால் சுற்றுலாக் கொள்கை ஒன்றை வடிவமைத்தல் மற்றும் இலக்கிடப்பட்ட வெளிநாட்டுச் சந்தைகளில் மேம்படுத்தல் செயற்பாடுகள் அரசாங்கத்தின் பங்களிப்புடன் வசதிப்படுத்தப்பட வேண்டும். மேலும், குறைந்த செலவுடைய வானூர்திகளை ஊக்குவித்தல் அதிகரிக்கப்பட்ட விமானக் கொள்ளளவு மற்றும் குறைந்த விமானக் கட்டணங்கள் என்பன சுற்றுலாப் பயணிகளின் வருகைகயை அதிகரிப்பதற்கு உதவும்.

## தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் பணிகளிலான வர்த்தகம்

- **2005 இல் தொலைத்தொடர்பூட்டல் பணிகளிலிருந்தான தேறிய வருவாய்கள் வீழ்ச்சியடைந்துள்ளன.** 2003 ஏப்பிறலிலிருந்து பன்னாட்டுத் தொலைத்தொடர்பூட்டல் நுழைவாயில் தாராளமயமாக்கப்பட்டமையின் காரணமாக பல பன்னாட்டு அழைப்புக்கள் உருவாக்கப்பட்டதன் விளைவாக இவ் வருவாய்கள் 2005 இல் மேலும் ஐ.அ.டொலர்கள் 25 மில்லியன்களுக்கு 24.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இணையத்தளம், தொலைநகல் மற்றும் மின்அஞ்சல் ஆகிய தொடர்பூட்டல் மாதிரிகளின் அதிகரித்த பாவனையின் விளைவாக இவ் வருவாய்களின் வீழ்ச்சி மேலும் அதிகரித்தது.

- **தகவல் தொழில்நுட்பத்தின் இயலத்தக்க பணிகளை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதிகளின் துரித வளர்ச்சியின் பிரதிபலிப்பாக தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதிகளிலிருந்தான தேறிய வருவாய்கள் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 82 மில்லியன்களுக்கு 13.9 சதவீதத்தினால் அதிகரித்தது.** வெளியிலிருந்து மூலவளப் பணிகளைப் பெற்றுக் கொள்ளும் முக்கியமான ஏற்றுமதிப் பணிகளில் ஒன்றாகத் தோற்றமெடுத்துள்ள செயல் முறையினை மேம்படுத்துவதற்கு அவசியமான நம்பிக்கையான இணைப்புக்கள் மற்றும் துரித அனுப்புதல்கள் என்பவற்றை உறுதிப்படுத்துகின்ற தொடர்ச்சியான தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொலைத் தொடர்பூட்டல் உட்கட்டமைப்பு மேலும் விரிவாக்கப்படுவது அபிவிருத்திக்கு அவசியமான வையாகும்.

## வருமான உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள்

- **ஐ.அ.டொலர்கள் 76 மில்லியன் தொகையினைக் கொண்ட அரச வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்ததன் மத்தியிலும் 2005 இல் வருமானக் கணக்கின் பற்றாக்குறை விரிவடைந்தது.** உலகளாவிய வட்டி வீதத்தில் ஏற்பட்ட உயர்வு மற்றும் அலுவல்சார் ஒதுக்குகளை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்பட்ட நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட பாரியதொரு அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்கீடுகளின் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் 2005 இல் 15.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பொன்று வட்டி வருமானத்தின் குறிப்பிடத்தக்களவானதொரு அதிகரிப்பினை ஏற்படுத்தியது. ஆயினும் 2004 இல் காணப்பட்ட பெறுமானத் தேய்வுக்கு எதிராக, 2005 இல் பிரதான நாணயங்களுக் கெதிராக ஐ.அ.டொலரின் பெறுமானம் அதிகரித்தமையானது ஐ.அ.டொலர் நியதிகளின் வெளிநாட்டு ஒதுக்குகளின் பெறுமதியில் குறிப்பிடத்தக்கதொரு இழப்பிற்கு காரணமாக அமைந்தது. இந்த இழப்பானது வருமானக் கணக்கில் குறைந்தளவானதொரு வருமானமாகப் பிரதிபலிக்கப்படுகிறது. 2005 இல் வெளிநாட்டு முதலீட்டாளர்களால் தமது தாய்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள்

அட்டவணை 5.8
சுற்றுலாச் செயலாற்றம்

| விடயம் | 2001 | 2002 | 2003 | 2004 (அ) | 2005 (ஆ) | வளர்ச்சி வீதம் 2004 (அ) | வளர்ச்சி வீதம் 2005 (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சுற்றுலா வருகைகள் | 336,794 | 339,171 | 500,642 | 566,202 | 549,308 | 13.1 | -3.0 |
| 2. சுற்றுலா இரவுகள் ('000) | 3,342 | 3,989 | 5,093 | 5,742 | 4,400 | 12.7 | -23.4 |
| 3. தங்கும் அறை விகிதம் (%) | 42.1 | 43.1 | 53.2 | 59.3 | 43.9 | 11.5 | -26.0 |
| 4. மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.மில்.) | 18,863 | 24,202 | 32,810 | 42,666 | 36,377 | 30.0 | -14.7 |
| 5. தலைக்குரிய சுற்றுலாப் பயணச்செலவு (ரூபா) | 56,008 | 61,556 | 65,536 | 75,355 | 66,223 | 15.0 | -12.1 |
| 6. மொத்தத் தொழில் நிலை | 80,904 | 93,170 | 112,226 | 129,038 | 125,004 | 15.0 | -3.1 |
| நேரடி | 33,710 | 38,821 | 46,761 | 53,766 | 52,085 | 15.0 | -3.1 |
| மறைமுக | 47,194 | 54,349 | 65,465 | 75,272 | 72,919 | 15.0 | -3.1 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை சுற்றுலாச் சபை.
இலங்கை மத்திய வங்கி.

ஆண்டு காலத்தில் அதிகரித்ததுடன், இதற்கு அவர்களது முதலீட்டிலிருந்தான உயர்ந்தளவான வருவாய்கள் மற்றும் கடந்த காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரித்தமை என்பன காரணங்களாக அமைந்தன. இவ்வகையான அபிவிருத்திகளின் பலனாக, வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2004 இன் ஐ.அ.டொலர்கள் 204 மில்லியனிலிருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 299 மில்லியனுக்கு ஏறத்தாழ 46.6 சதவீதத்தினால் விரிவடைந்தது.

## நடைமுறை மாற்றல்கள்

- **விரிவாக்கமடைந்த வர்த்தகப் பற்றாக்குறையில் பிரதான நிதியிடல் மூலமாக விளங்கும் நடைமுறை மாற்றல்கள் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள், 2005 இல் ஐ.அ.டொலர்கள் 1,828 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 32.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** ஐ.அ.டொலர்கள் 50 மில்லியன்கள் கொண்ட சுனாமியுடன் தொடர்புடைய தற்போதைய உள்பாய்ச்சல் உட்பட தனியார் துறையின் பண அனுப்பல் 2005 காலப்பகுதியில், ஐ.அ.டொலர்கள் 1,968 மில்லியன்களுக்கு 25.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. நடைமுறைக் கணக்கிற்கான இரண்டாவது மிகப்பெரிய உட்பாய்ச்சலாக அமைந்துள்ள தொழிலாளர் பணஅனுப்புதல்கள் 2005 காலப்பகுதியில் ஐ.அ.டொலர்கள் 1,918 மில்லியன்களுக்கு 22.6 சதவீதத்தினால் அதிகரித்தது. வரலாற்று ரீதியான வளர்ச்சி வீதத்தில் இது ஏறத்தாழ இருமடங்காகும். சுனாமி பேரழிவின் பின்விளைவு காரணமாக வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களால் தமது குடும்பம், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என்பவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெருமளவான பணம், ஆண்டு காலத்தில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்ற இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை மற்றும் பல்வேறு வர்த்தக வங்கிகளினால் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் இலத்திரனியல் நிதிமாற்றல் முறைமைகள் தொடர்பாக பிரபல்யமடைந்தமை என்பன வற்றின் மூலம் இவ்வுயர் வளர்ச்சி ஏற்பட்டது. 2005 இல் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு சென்ற இடம்பெயர்ந்தவர்களின் வருடாந்த எண்ணிக்கை 230,206 இற்கு 8.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

- **விரிவாக்கமடைந்த வர்த்தகப் பற்றாக்குறையை நிதியிடுவதில் தொழிலாளர் பணஅனுப்பலானது ஏற்றுமதிகளுக்கு அடுத்த படியாக வெளிநாட்டு நாணயமாற்றில் மிகப்பெரிய தனியானதொரு உட்பாய்ச்சலாக தொடர்ந்தும் விளங்கி முக்கியமானதொரு பங்கை வகிக்கின்றது.** 2005 காலப்பகுதியில், தொழிலாளர் பணஅனுப்புதல்கள் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட வர்த்தகப் பற்றாக் குறையை நிதியிடுவதற்குப் போதுமானதாக இருந்தது. உற்பத்தி நோக்கங்களுக்காக பண அனுப்புதல்களைப் பயன்படுத்துவதின் தேவையை இனங்காணல், மற்றும் இடம்பெயர்ந்த இலங்கையர்களிடமிருந்து பெருமளவிலான உட்பாய்ச்சல்களை நாட்டிற்குள் பெருமளவிற்கு கவருதல் என்பன வற்றிற்காக 2006 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப் பட்டதற்கமைய அரசாங்க மானது "நாட்டினைக் கட்டியெழுப்பு வதற்கான" முறிகளை அறிமுகம் செய்தது.

- **இலங்கையர்களுக்கான பிரதான வேலைவாய்ப்பு உருவாக்கல் பிராந்தியமாக மத்திய கிழக்கு தொடர்ந்து வருகிறது.** தேர்ச்சியற்ற தொழிலாளர்களைப் பிரதானமாக வேலைக் கமர்த்தும் மத்திய கிழக்குப் பிராந்தியங் களிலிருந்தான தொழிலாளர் பணஅனுப்புதல்கள்

*சிறப்புக் குறிப்பு - 10*

## பொருளாதார முன்னேற்றமும் தொழிலாளர் பணஅனுப்புதலிலன சிக்கல்களும்

கடந்த ஆண்டுகளில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான அந்நியச் செலாவணி பாய்ச்சலின் பிரதான மூலமாக தொழிலாளர்கள் பணி வனுப்பல்கள் மாறியுள்ளன. இது வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்குப் பின்பு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குக் கிடைக்கத் தக்கதாகவுள்ள வெளிநாட்டு நிதியிடலின் இரண்டாவது முக்கிய மூலமாகவும் அலுவல்சார் உதவியின் அளவை விட இருமடங்கிற்குக் கூடுதலாகவும் தற்போதுள்ளது.[1]

ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக குடிபெயர்ந்துள்ளதுடன் அவர்களில் பெரும் எண்ணிக்கையிலானோர் மத்தியகிழக்கு நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். தற்பொழுது பண அனுப்பல்கள் அரசாங்கத்திற்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை விஞ்சியதுடன் விரிந்து செல்லும் வர்த்தப் பற்றாக்குறையை நிதியிடுவதில் முக்கிய மூலமாக மாறியுள்ளது. எவ்வாறெனினும், ஏற்றுமதி வருமானங்களிலான வெளிநாட்டு வருவாய்களின் நியதிகளில், விசேடமாக புடவை மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் பிரதான மூலமாக தொடர்ந்தும் இருப்பதுடன் அதனை தொடர்ந்து பண அனுப்பல்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் காணப்படுகின்றன.

பணஅனுப்புதல்கள் சென்மதிநிலுவையில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் அதேவேளை வெளிநாட்டு செலாவணி மற்றும் செலாவணி வீதத்திலான அழுத்தத்தினைக் குறைக்கின்றது. பணஅனுப்புதல்கள் நாட்டின் கொடுகடன் நம்பகத்தன்மையையும் பன்னாட்டு மூலதனச் சந்தைகளுக்கு அவை அடையும் தன்மையையும் அதிகரிக்கின்றது. பொருளாதார சுற்றுக்கள் மேல்நோக்கி செல்லும் பொழுது அதிகரித்தும் கீழ்நோக்கிச்செல்லும் பொதுவான வீழ்ச்சியடையும் போக்கினையும் கொண்டிருக்கும் அதேவேளை பணஅனுப்புதல்கள் நாட்டின் கீழ்நோக்கிய பொருளாதாரத்தின்போது அதிகரித்தும் மேல்நோக்கிய பொருளாதாரத்தின்போது எதிரான விளைவை ஏற்படுத்தும் இந்த பணஅனுப்புதல்கள் வெளிநாட்டு மீதியிலான தளம்பலைக் குறைத்து அதற்கெதிரான சுற்றை ஏற்படுத்தும் பண அனுப்புதல்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான வெளிநாட்டு செலாவணி வருவாய்களின் ஏனைய மூலவளங்களை விட மிகவும் குறைவாக விளங்கி கூடிய நடுநிலைமையான வருமான பங்கீட்டுத் தாக்கத்தினை கொண்டுள்ளது.

குடிபெயர்ந்தவர்களிடமிருந்தான பணஅனுப்புதல்கள் பயனுள்ளதாக இருந்த போதிலும் தொழிலுக்கான குடிப்பெயர்வு இணைந்த செலவுகள் எதனையும் கொண்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் குடும்ப சீர்குலைவுகளினால் தோன்றும் சமூக செலவானது தற்காலிகமாக முக்கிய செலவாக இருக்கின்றது. மூளைசாலிகளின் வெளியேற்றம் மற்றும் திறமைசாலிகளின் வெளியேற்றம் பொருளாதார வளர்ச்சியை பாதிக்கின்றது. வெளிநாட்டு நாடுகளால் வருவிக்கப்பட்ட சில தேர்ச்சிகள் தொழிலாளர்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் பற்றாக்குறைகளை ஏற்படுத்தக்கூடும்.

மொத்த குடிப்பெயர்வில் பணிப்பெண்களும் திறனற்ற ஊழியர்களும் மொத்த தொழிலுக்கான குடிப்பெயர்வில் 70 சதவீதத்திற்கு மேலாக இருப்பதுடன் தேர்ச்சியடிப்படையிலான குடிப்பெயர்வு ஏறக்குறைய 20 சதவீதமாக காணப்படுகின்றது. கணக்கியல், சட்டம், பொறியியல் கட்டிட நிர்மாணம், தொழில்நுட்பம் மற்றும் கணனி மென்பொருள் அபிவிருத்தி போன்ற துறைகளில் உயர் இயலளவுடைய தொழில்சார் அலுவலர்களை ஊக்குவிப்பதனால் பணஅனுப்புதல்களின் பாய்ச்சல்களை அதிகரிக்கக்கூடிய உள்ளார்ந்த வளத்தைக் கருத்திற் கொண்டு இலங்கையின் வெளிநாட்டு தொழில் கொள்கையானது குடிபெயர்வினை ஊக்குவிக்கக்கூடிய வகையில் மீளமைக்கப்படல் வேண்டும். பணிகளிலான வர்த்தகம் மீதான தேர்ச்சியடிப்படையிலான பொது உடன்படிக்கை நிபந்தனையின் ஏற்பாடுகளின் கீழ் பணிகளிலான வர்த்தகம் தற்போது படிப்படியாக தாராளமயப்படுத்தப்பட்டு வருவதுடன் மாதிரி 4 அல்லது சாதாரண நபர்களின் அசைவு என்பது வழங்கல் சேவைகளில் முக்கியமான மாதிரியொன்று காணப்படுவதற்கான வளர்ச்சியடைந்து வரும் அங்கீகாரம் காணப்படுகின்றது. இலங்கையானது பல்வேறு துறைகளில் உயர் தகைமையுடைய தொழில் தேர்ச்சியுடையோரை உருவாக்கி வருவதனால் இலங்கையானது மாதிரி 4 னூடாக தனது

1. உலகளாவிய பொருளாதார வாய்ப்புக்கள்: பணஅனுப்பல்களின் பொருளாதாரச் சிக்கல்களும் குடிப்பெயர்வும் (2006), உலக வங்கி

***சிறப்புக் குறிப்பு - 10 தொடர்ச்சி***

அட்டவணை சீ.10.1

வெளிநாட்டுப் பெறுகைகளின் முக்கிய மூலங்களும் தொழிலாளர் பண அனுப்பல்களின் முக்கியத்துவமும்

(ஐ.அ.டொ.மில்லியன்)

| | 1980 | 1985 | 1990 | 1995 | 2000 | 2005(அ) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதி வருவாய்கள் (பொருட்கள்) | 1064.7 | 1315.3 | 1983.9 | 3806.6 | 5522.3 | 6346.7 |
| புடவை மற்றும் ஆடைகள் | 109.7 | 293.1 | 628.1 | 1852.6 | 2982.0 | 2894.6 |
| தேயிலை | 373.3 | 441.9 | 494.8 | 480.7 | 701.1 | 810.2 |
| இறப்பர் | 156.7 | 97.8 | 76.9 | 111.5 | 28.7 | 46.9 |
| தெங்குப்பொருள் | 74.6 | 113.9 | 69.5 | 102.8 | 121.1 | 113.2 |
| ஏனையவை | 350.4 | 368.6 | 714.6 | 1259.0 | 1689.4 | 2481.7 |
| ஏற்றுமதி வருவாய்கள் (சேவைகள்) | 279.1 | 328.6 | 531.0 | 821.0 | 953.0 | 1540.2 |
| போக்குவரத்து | 40.5 | 63.5 | 95.3 | 336.0 | 406.0 | 673.4 |
| பிரயாணம் | 49.0 | 82.2 | 127.8 | 226.0 | 252.0 | 429.1 |
| ஏனையவை | 189.6 | 182.9 | 307.9 | 259.0 | 295.0 | 437.7 |
| தொழிலாளர் பணஅனுப்புதல்கள் | 152.3 | 291.6 | 400.7 | 290.0 | 1160.0 | 1918.5 |
| வெளிநாட்டு நேரடி முதலீடு | 42.9 | 24.4 | 34.0 | 27.5 | 175.1 | 272.2 |
| வெளிநாட்டு கடன்கள் மற்றும் உதவிகள் | 307.0 | 516.6 | 526.3 | 847.0 | 422.0 | 972.0 |
| மொத்த நடைமுறைக்கணக்கின் சதவீதமாக தொழிலாளர் அனுப்புதல் | 9.3 | 13.8 | 12.9 | 20.6 | 14.9 | 19.4 |
| உட்பாய்ச்சல்கள் | 15.4 | 40.0 | 57.0 | 52.5 | 64.5 | 76.2 |
| வர்த்தக மீதி | 49.6 | 56.4 | 76.1 | 93.3 | 274.9 | 197.3 |
| கடன்கள் மற்றும் உதவிகள் | 7.4 | 14.3 | 14.9 | 14.9 | 15.8 | 21.6 |
| மொத்த இறக்குமதிகள் | 3.8 | 4.9 | 5.0 | 6.1 | 7.0 | 8.1 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | | | | | | |

(அ) தற்காலிகமானவை

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

வர்த்தகத்தில் ஒப்பீட்டு நன்மையினை கொண்டுள்ளது. எனவே அரசாங்கமானது மனித மூலவளத்தின் குறிப்பாக தேர்ச்சிபெற்ற வகைகளின் குறுங்கால குடிப்பெயர்வினை ஊக்குவிப்பதனை இலக்காகக் கொண்டு குடிப்பெயர்வு கொள்கையினை முறைப்படுத்தல் வேண்டும்.

பணஅனுப்புதல் சேவை வழங்குநர்கள் மற்றும் நடைமுறையிலுள்ள தபால் மற்றும் வங்கி வலைப்பின்னல்களுக்கிடையில் கூட்டினை உருவாக்குவதன் மூலம் பணஅனுப்புதல் சேவைகளின் அளவினை விரிவாக்குவதற்கும் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் உதவமுடியும்.

வெளிநாட்டு தொழில் முகவர்களால் குடிபெயர்பவர்கள் எதிர்நோக்கும் தேவையற்ற தொந்தரவுகளை குறைப்பதற்கு நெருங்கிய நிபந்தனைகள் மற்றும் மேற்பார்வைகள் அவசியமாகும். குடிபெயர் பாய்ச்சல் மற்றும் பாதுகாப்பு கணிப்பீடுகளை வலுப்படுத்தல் போன்ற இலக்கினை அடையக்கூடிய வகையில் நடைமுறையிலுள்ள பொருளாதார கூட்டு ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் அல்லது புதிய ஒப்பந்தங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

பணஅனுப்புதல்கள் வெளிநாட்டு நிதியிடல் ஒரு முக்கிய மூலமாக இருப்பினும் அரசாங்கம் வெளிநாட்டு நிதியிடலுக்கான ஒரு நீண்டகால மூலமாக இந்த பாய்ச்சலில் தங்கியிருக்கக்கூடாது. ஏனெனில் உள்நாட்டு தொழில்வாய்ப்புத் திறனை அதிகரிப்பதானது பொருளாதார வளர்ச்சியினை முடுக்கிவிடும் செயன்முறையாக இருப்பதுடன் ஒருநாட்டின் சராசரி வருமான அதிகரிப்பானது வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான குடிப்பெயா வினை ஊக்குவிக்காது போகலாம். வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்கு விப்பதற்கான மாற றுவழியாக அதிகூடிய வாய்ப்புள்ள மிக நுணுக்கமான தொழில்நுட்பத்தினை கொண்டு வருதல் ஏற்றுமதிச் சந்தையினை விரிவுபடுத்தல், பொருளாதாரத்தில் தேர்ச்சியை அதிகரிப்பதுடன் உற்பத்தித் திறனை அதிகரித்தல் போன்றவற்றை கையாளல் வேண்டும்.

2005 இன் மொத்த தொழிலாளர் அனுப்புதல்களில் ஏறத்தாழ 56.8 சதவீதத்திற்கு வகைகூறியது. தேர்ச்சிபெற்ற தொழிலாளர் களுக்கானதொரு சந்தையாக தோற்றமெடுத்துள்ள ஐரோப்பிய ஒன்றியம் ஏறத்தாழ 18.5 சதவீதத்திற்கு வகை கூறியது. மொத்த மாற்றல் பெறுகைகளில் 6.5 சதவீதம் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெற ப்பட்டது. ஏனைய முக்கிய பங்களிப்பாளர்களாக வடஅமெரிக்கா மற்றும் தூரகிழக்கு ஆசிய நாடுகள் என்பன விளங்கி ஏறத்தாழ முறையே 6.5 சதவீதம் மற்றும் 4.5 சதவீதம் என்பனவற்றிற்கு வகை கூறின. இலங்கை தொழில்சார் நிபுணத்துவ தொழிற்படையினரைத் தொடர்ந்தும் உருவாக்கு வதனால், இலங்கை ஒப்பீட்டு ரீதியில் அனுகூலங்களைக் கொண்டுள்ள தொழில்சார் நிபுணத்துவப் பணிகளைக் கொண்ட நாடுகளுடன் இருபுடை ஒப்பந்தங்களில் நுழைவதன் மூலம் வர்த்தகப் பணி பொது ஒப்பந்தத்தின் மாதிரி 4 இன் கீழ் அரசாங்கம் வர்த்தகத்தை மேம்படுத்த முடியும்.

- ***2005 இல் அலுவல்சார் நடைமுறை மாற்றல்கள் ஐ.அ.டொலர்கள் 30 மில்லியன்களிலிருந்து ஐ.அ.டொலர்கள் 93 மில்லியன்களாக மூன்று மடங்கிற்கு மேலாக அதிகரித்தது.*** சுனாமிப் பேரழிவினைத் தொடர்ந்து சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக பல்புடை மற்றும் இருபுடை நன்கொடையாளர்களிடமிருந்து அரசாங்கம் உணவு, மருந்து தற்காலிக உறைவிடம் போன்ற பொருட்களாகவும் உடனடி நிவாரண நடவடிக்கையாக காசாகவும் கணிசமானளவு மாற்றல்களை பெற்றுக்கொண்டது.

## நடைமுறைக் கணக்கு மீதி

- ***2004 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.2 சதவீதமாக இருந்த நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 2005 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.8 சதவீதத்திற்கு குறைவடைந்தது.*** ஆயினும், 2005இல் ஐ.அ.டொலர் நியதிகளில் இது ஐ.அ.டொலர்கள் 650 மில்லியன்களுக்கு 0.3 சதவீதத்தினால் விரிவாக்கமடைந்தது. நடைமுறை மாற்றல் பெறுகைகளில் குறிப்பாக தொழிலாளர் பண அனுப்பலில் ஏற்பட்ட பாரியதொரு அதிகரிப்பானது வர்த்தக பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்கும் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையினை கட்டுப்படுத்துவதற்கும் உதவியது.

## 5.5 மூலதனம் மற்றும் நிதிக்கணக்குகள் மற்றும் சென்மதி நிலுவைகள்

### மூலதனம் மற்றும் நிதிக் கணக்குகள்

- ***2005 இல் மூலதனம் மற்றும் நிதிக்கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் முன்னேற்றமடைந்தன.*** இதற்கு பாரியளவான உயர்ந்த மூலதன மாற்றல்கள் குறிப்பாக அரசாங்கத்திற்கான சுனாமியுடன் தொடர்புடைய உட்பாய்ச்சல்கள், உயர்ந்தளவான தேறிய முதலீட்டுப் பட்டியல் உட்பாய்ச்சல்கள், தனியார் துறைக்கான அதிகரிக்கப்பட்ட கடன் உட்பாய்ச்சல்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் தமது வெளிநாட்டுச் சொத்துக்களை உள்நாட்டுச் சொத்துக்களாக மாற்றியமை மற்றும் கடன் கொடுப்பனவுகளைப் பின்போடுவதற்கான சட்ட இசைவுத் தாமதம் காரணமாக அரசாங்கத்தின் குறைந்தளவான கடன் மீள்கொடுப்பனவு என்பன காரணங்களாக அமைந்தன. ஆயினும், அரசாங்கத் திற்கான கடன் உட்பாய்ச்சல்கள் 2004 ஐ விடவும் 2005 இல் குறைவாக இருந்தது. கொடையாளர் களிடமிருந்தான பெரும்பாலும் அரசுக்கான மூலதனத் தன்மைகளைக் கொண்ட கொடைகளைப் பதிவு செய்கின்ற மூலதனக் கணக்கு 2004 இன் ஐ.அ.டொலர்கள் 64 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 250 மில்லியன்களுக்கு அதிகரித்தது. வெளிநாட்டு நன்கொடையாளர் களிடமிருந்து பெறப்பட்ட சுனாமியுடன் தொடர்புடைய மூலதன உட்பாய்ச்சல்களே இதற்கு பிரதான காரணமாகவிருந்தது. அதே நேரம், நிதியியல் கணக்கு 2004 இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர்கள் 567 மில்லியன் மிகையுடன் ஒப்பிடுகையில் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 974 மில்லியன் மிகை யொன்றைப் பதிவு செய்தது. இதன் பயனாக, மூலதன மற்றும் நிதியியல் கணக்கின் திரண்ட மிகையானது நடைமுறைக் கணக்குப் பற்றாக் குறையினை ஈடுசெய்வதற்கு கூடுதலானளவில் போதுமானதாக இருந்தது.

## வெளிநாட்டு நேரடி முதலீடு

- ***2005 இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் இரண்டும் அதிகரித்தன.*** 2004 இல் ஐ.அ.டொலர்கள் 223 மில்லியன்களாகவிருந்த மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 272 மில்லியன்களுக்கான ஒரு சாதனை மட்டத்தை அடைந்தது. பணிகள் துறையிலுள்ள கம்பனி

ஒன்றினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த வருவாய்களின் மீள்முதலீடுகளில் ஏற்பட்ட கூரிய அதிகரிப்பொன்று இதற்கான பிரதான காரணமாகவிருந்தது. இதில், முக்கியமான பகுதியான ஏறத்தாழ ஐ.அ.டொலர்கள் 151 மில்லியன் பணிகள் மற்றும் உட்கட்டமைப்புத் துறைகளிலுள்ள 69 செயற்றிட்டங்களினாலும், அதனைத் தொடர்ந்து ஐ.அ.டொலர்கள் 47 மில்லியன் புடவைகள் மற்றும் ஆடைகள் துணைத்துறையிலுள்ள 36 செயற்றிட்டங்களினாலும் பெறப்பட்டிருந்தன. உயர்ந்த உலகளாவிய போட்டியின் மத்தியிலும், ஆடைகள் துறையின் தொடர்ச்சியான புதிய வெளிநாட்டு முதலீட்டின் உட்பாய்ச்சல்கள் இலங்கையின் ஆடைகள் கைத்தொழிலின் உறுதித்தன்மை மீதான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கைத் தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இவ்வாண்டு காலத்தில் சில உள்நாட்டு கம்பனிகள் வெளிநாட்டில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டமையினால், 2004 இல் ஐ.அ.டொலர் 6 மில்லியனாக இருந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 38 மில்லியன்களுக்கு அதிகரித்தது. இந்த வெளிப்பாய்ச்சல்களின் விளைவாக, 2004 இல் ஐ.அ.டொலர் 217 மில்லியனாகவிருந்த தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர்கள் 2005 இல் 234 மில்லியன்களால் மட்டும் அதிகரித்தது. இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் இலங்கை முதலீட்டுச்சபையினால் அனுமதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 2004 இல் ஐ.அ.டொலர் 689 மில்லியன்களுக்கான வெளிநாட்டு முதலீடு கடப்பாடுகளுடன் கூடிய 296 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில்2005 இல் ஐ.அ.டொலர் 276 மில்லியன் வெளிநாட்டு முதலீட்டு கடப்பாடுகளுடன் கூடிய 223 முதலீட்டுச் செயற்றிட்டங்களுக்கும் குறைவடைந்தது. இவ்வாறு குறைவடைந்தமைக்கு செயற்றிட்டங்களின் உறுதிப்பாடு மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரம் என்பவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் விண்ணப்பங்களை கடுமையான பரிசீலனைக்கு உட்படுத்தியமையே காரணமாகும். ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையும் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 361 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீட்டு கடப்பாட்டுடன் 228 இலிருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 322 மில்லியன் கடப்பாட்டுடன் 167 செயற்றிட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. ஆயினும் கடுமையான பரிசீலனைக் நடைமுறைகளின் விளைவாக ஒப்பீட்டு ரீதியில் எதிர்காலத்தில் உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்றிட்டங்களில் பெரும்பங்கினை செயலுருப்படுத்தக் கூடியதாகவிருக்கும். அரசாங்கக் கொள்கை நிகழ்ச்சி நிரலில் சுட்டிக்காட்டியவாறு பிராந்திய ரீதியான சமநிலை வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக குறைவிருத்திப் பிராந்தியத்தில் இலங்கை முதலீட்டுச்சபை முதலீடுகள் தொடர்பான புதிய ஊக்குவிப்புக்களை அறிவித்துள்ளது. ஆரம்ப நிலையில் நிபயூம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 300 தொழிற்சாலைகள் இவ்வாறாக ஊக்குவிப்புக்களைப் பெற விருக்கின்றன.

### அரசாங்கத்திற்கான கடன் மூலதனம்

- **2004 இல் ஐ.அ.டொலர் 771 மில்லியன்களாகவிருந்த அரசாங்கத்திற்கான மொத்த நீண்ட தவணைக் கடன் உட்பாய்ச்சல்கள் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 747 மில்லியன்களுக்கு 3.1 சதவீதத்தினால் குறைவடைந்தது.** சுனாமி மீள்கட்டுமான செயற்றிட்டங்களுக்காக அரசாங்கம் ஐ.அ.டொலர்கள் 93 மில்லியன்களைப் பெற்றுக்கொண்டது. ஐ.அ.டொலர் 100 மில்லியனுக்கான கூட்டு வெளிநாட்டுக் கடன் ஒன்றையும் பெற்றுக்கொண்டது. சுனாமியுடன் தொடர்புடைய உட்பாய்ச்சல்கள் மற்றும் கூட்டுக்கடன்கள் என்பன நீங்கலாக, அரசாங்கத்திற்கான கடன் உட்பாய்ச்சல்கள் ஏறத்தாழ ஐ.அ.டொலர்கள் 554 மில்லியன்களுக்கு 28.1 சதவீதத்தினால் கணிசமானளவு குறைவடைந்திருக்கின்றது. அதேநேரம், அரசாங்கத்தின் கடன்களுக்கான மீள்கொடுப்பனவு 2004 இன் ஐ.அ.டொலர்கள் 331 மில்லியன்களிலிருந்து ஐ.அ.டொலர்கள் 194 மில்லியன்களுக்குக் குறைவடைந்ததுடன் 2005 இல் பாரிஸ் கழகத்தின் அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர்கள் 188 மில்லியன் வரையான கடன்களைக் காலம்தாழ்த்திய இசைவுத் தாமதம் மூலமான ஆதரவே இதற்கான காரணமாகவிருந்தது. 2005 இல் நிகழ்ச்சித்திட்டக் கடன் உட்பாய்ச்சல்கள் ஏறத்தாழ ஐ.அ.டொலர்கள் 20 மில்லியன்களாக இருந்தன. இது 2005 இற்காக எறிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர்கள் 119 மில்லியன் உட்பாய்ச்சல்களை விடவும் பெருமளவு குறைவானதாகவும், 2004 இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர்கள் 30 மில்லியன் உட்பாய்ச்சல்களை விடவும் குறைவானதாகவும் இருந்தது. கடன்களைப்

பகிர்ந்தளித்தல்களுடன் இணைக்கப்பட்டிருந்த சீர்திருத்தங்களின் நடை முறைப்படுத்தலில் காணப்பட்ட காலதாமதமே இக்குறை வடைதலிற்கான காரணமாக அமைந்தது. நிகழ்ச்சித் திட்ட நிதியிடலின் பற்றாக்குறை ஐ.அ.டொலர்கள் 100 மில்லியன்களைக் கொண்ட கூட்டுக்கடன்களின் மூலம் ஈடுசெய்யப்பட்டது. சுனாமி மீள்கட்டுமான செயற்றிட்டங்களுக்காக ஐ.அ.டொலர் 93 மில்லியன் கொண்ட செயற்றிட்டக் கடன்கள் பெறப்பட்டபோதும் செயற்றிட்டக் கடன்களின் பகிர்ந்தளிப்பு 2004 இல் ஐ.அ.டொலர் 689 மில்லியனிலிருந்து 2005 இல் ஐ.அ. டொலர் 620 மில்லியனுக்கு 10.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சுனாமியுடன் தொடர்புடைய கடன்கள் நீக்கப்பட்டிருந்தால் செயற்றிட்டக் கடன் பகிர்ந்தளித்தல்கள் ஐ.அ.டொலர்கள் 527 மில்லியன்களுக்கு 23.5 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2005 இன் வெளிநாட்டினால் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்களாக வீதி அபிவிருத்தி, கல்வி, மின்சாரம், நீர் விநியோகமும் நீர்ப்பாசனமும், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி, விமான நிலைய அபிவிருத்தி மற்றும் சுனாமி புனர்நிர்மாணம், மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளில் காணப்பட்டன. வெளிநாட்டினால் நிதியியடப்பட்ட செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் துரிதப்படுத்துவதற்கு தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மத்தியிலும், வெளிநாட்டுக் கடன்களைப் பகிர்ந்தளிப்பதில் குறைந்தளவான முன்னேற்றம் காணப்படுவதற்கு நடைமுறைச் செயல்முறையில் தொடர்ந்து காணப்படும் தடைகளே காரணமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. 2005 இல் வெளிநாட்டு உதவிப் பயன்படுத்தல் வீதம் மேலும் 2 சதவீத புள்ளிகளினால் 16.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

- **2004 இல் சலுகை நியதிகளில் பெறப்பட்ட 92.7 சதவீதமான கடனுடன் ஒப்பிடுகையில், மொத்தமாகப் பெறப்பட்ட கடனில் 84.4 சதவீதம் சலுகை நிபந்தனை மீதும், மிகுதி வர்த்தக நியதிகள் மற்றும் நிபந்தனை அடிப்படையிலும் இருந்தது.** கடந்த காலத்தைப் போன்று பல்புடைக் கடன்வழங்கும் நிறுவனங்கள் 2005 இல் பெருமளவிலான வெளிநாட்டுக் கடன்களை வழங்கியது. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பன பிரதான பல்புடைக் கடன்வழங்கும் முகவர்களாக தொடர்ந்தும் விளங்கி ஏறத்தாழ முறையே ஐ.அ.டொலர்கள் 198 மில்லியன்களையும் ஐ.அ.டொலர்கள் 113 மில்லியன்களையும் வழங்கின. இருபுடை உதவிகள் ஐ.அ.டொலர் 271 மில்லியன் அளவாக இருந்ததுடன் இதில் யப்பானிலிருந்து ஐ.அ.டொலர்கள் 199 மில்லியனும் சேர்மனியிலிருந்து ஐ.அ.டொலர்கள் 24 மில்லியன்களும் பெறப்பட்டது. யப்பானிலிருந்தான நிதிஉதவிகள் மொத்த சலுகை அடிப்படையிலான கடன்களில் 31.5 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பன முறையே 31.3 சதவீதம் மற்றும் 17.9 சதவீதம் என்பவற்றிக்கு வகைகூறின. 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவைகள் ஏறத்தாழ முறையே 37.7 சதவீதம், 25.8 சதவீதம் மற்றும் 9.5 சதவீதம் என்பவற்றிற்கு வகைகூறின.

- **சலுகையடிப்படையிலான வெளிநாட்டு நிதியிடலில் காணப்பட்ட பற்றாக்குறையானது சலுகைகளற்ற வெளிநாட்டு மற்றும் வெளிநாட்டு அந்நியச் செலாவணி கடன்கள் மூலம் நிதியிடப்பட்டது.** ஆண்டு காலத்தில், உள்நாட்டு வங்கிகளிலிருந்து ஏறத்தாழ ஐ.அ.டொலர்கள் 170 மில்லியன்களைக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணியின் குறித்துரைக்கப்பட்ட கடன்களை அரசாங்கம் தீர்ப்பனவு செய்தவேளை புதிய வழங்கல்கள் மற்றும் சுழலும் கடன் வசதி வழங்கப்பட்டமை என்பன மூலமாக வெளிநாட்டுச் செலாவணி வங்கிக் கூறுகளிலிருந்து ஐ.அ.டொலர்கள் 585 மில்லியன்கள் அளவிலான கடன்கள் திரட்டப்பட்டதன் பயனாக 2005 இல் தேறிய உள்நாட்டு அந்நியச் செலாவணிக் கடன்கள் ஐ.அ.டொலர் 415 மில்லியன்களாக இருந்தது. மேலும், மீதியாகவுள்ள நிதியிட வேண்டிய இடைவெளியை நிரப்புவதற்காக அரசாங்கம் பன்னாட்டுச் சந்தைகளிலிருந்து ஐ.அ.டொலர்கள் 100 மில்லியன்களைக் கொண்ட கூட்டுக்கடன் ஒன்றைத் திரட்டியது. வெளிநாட்டுச் செலாவணிக் கடன் மற்றும் கூட்டுக்கடன்கள் என்பன சந்தை வட்டி வீதத்தில் திரட்டப்பட்டன. உலகளாவிய செலாவணி வீதம் மற்றும் வட்டிவீத தளம்பல்கள் ஆகியவற்றின் படுகடன் இருப்பு அதிகரித்த வெளிப்படுத்துகைகளை ஏற்படுத்துமாகையால் அந்நியச் செலாவணியில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தக கடன்களின் மூலம் நடுத்தர மற்றும் நீண்ட கால கடன்களின் பற்றாக்குறையினை நிரப்புவது கொடுகடன் உறுதிப்பாட்டில் மிகவும் மோசமான சிக்கல்களை ஏற்படுத்தும்.

## தனியார் துறைக்கான கடன் மூலதனம்

- **தனியார் துறை மற்றும் அரச கூட்டுத் தாபனங்களுக்கான நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் 2004 இன் ஐ.அ.டொலர்கள் 169 மில்லியன்களிலிருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 197 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 16.6 சதவீதத்தினால் அதிகரித்தது.** இந்தியாவிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்காக இந்தியக் கொடுகடன் வரிசையின் கீழ் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர்கள் 144 மில்லியன்களைக் கொண்ட இருபுடைக் கடன் ஒன்றிலிருந்து இவ்வதிகரிப்பிற்கான பிரதான பங்களிப்பு கிடைத்தது. நாட்டின் சென்மதிநிலுவை மீது அதிகரித்த எண்ணெய் இறக்குமதியின் தாக்கத்தை தவிர்ப்பதற்கு அரசாங்கத்தினால் இக்கடன் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

## குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்

- **குறுங்கால மூலதனமானது 2004 இன் ஐ.அ.டொலர்கள் 112 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 176 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவு செய்தது.** பங்குச்சந்தை மூலமான தேறிய சொத்துப்பட்டியல் முதலீட்டு உட்பாய்ச்சல்கள் அதிகரிப்பு ஒன்றைப் பதிவு செய்தது. பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளின் உறுதியான செயலாற்றம் மற்றும் சாதகமானதொரு பொருளாதாரச் சூழ்நிலை என்பன இதற்கான காரணமாகும். ஐ.அமெரிக்காவின் மிகப்பெரிய அரச ஓய்வூதிய நிதியமான கலிபோர்னிய பொது ஊழியர்களின் வேலை ஓய்வுபெறல் திட்டமானது தோற்றமெடுத்து வரும் சந்தைகளின் முதலீட்டு தகைமைப் பட்டியலில் இலங்கையையும் உள்ளடக்கியுள்ளது. பணிகள் துறைக் கம்பனிகளின் பொது மக்களுக்கான இரு ஆரம்பப் வழங்கல்கள் 2005 இல் இலங்கையின் பங்குகளில் வெளிநாட்டு முதலீடுகளை மேலும் அதிகரிக்கச் செய்தது. சொத்துப்பட்டியல் முதலீடானது 2004 இன் ஐ.அ.டொலர்கள் 11 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 60 மில்லியன்களைப் பதிவு செய்தது. 2005 இல் கொழும்பு பங்குச் சந்தையானது மிகச் சிறந்த செயலாற்றம் மிக்க சந்தைகளுள் ஒன்றாக தோற்றமெடுத்துள்ளது. 2005 இன் குறைவான இறக்குமதி வளர்ச்சி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தியை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கான நீண்ட தவணை இந்தியக் கொடுகடன் வசதியின் கிடைப்பனவு என்பன காரணமாக குறுங்கால ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்புடைய நிரம்பலர்களுக்கான கொடுகடனை உள்ளடக்கிய தனியார் குறுந்தவணைக் கொடுகடன் 2004 இன் தேறிய உட்பாய்ச்சலான ஐ.அ.டொலர்கள் 28 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 16 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலொன்றைப் பதிவு செய்தது.

வரைபடம் 5-7
அலுவல்சார் மற்றும் தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள்




- **வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2004 இன் ஐ.அ.டொலர்கள் 151 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 100 மில்லியன்களால் குறைவடைந்தது.** அரசாங்கத்திற்கு ஐ.அ.டொலர்கள் 415 மில்லியன்களைக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி வங்கிப் பிரிவுகளில் தேறிய கடன்வழங்கலொன்றின் மத்தியிலும், 2005 இல் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பானது உயர்ந்தளவான வெளிநாட்டு முதலீடுகளை பிரதிபலித்தது. ஆயினும் 2005 இல் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர்கள் 323 ஆல் அதிகரித்தமையின் விளைவாக தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 100 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பானது வர்த்தக வங்கிகளில் ஏற்பட்ட உயர்ந்தளவான வெளிநாட்டு முதலீடுகளைப் பிரதிபலிக்கின்றது. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது பிரதானமாக வர்த்தக வங்கியொன்றினால் பெறப்பட்ட கூட்டுக்கடனான ஐ.அ.டொலர்கள் 130 மில்லியனைப் பிரதிபலித்தது.

## சென்மதி நிலுவையும் வெளிநாட்டு ஒதுக்குகளும்

- **2005 இல் சென்மதி நிலுவை மிகை ஒன்றினைப் பதிவு செய்தது.** ஆண்டு காலத்தில் மூலதன மற்றும் நிதிக்கணக்குகளுக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்கு பற்றாக் குறைக்கு நிதியிடுவதற்கு போதுமான அளவிலும் கூடியதாக இருந்தது. இதன் விளைவாக, 2004 இல் பதிவு செய்யப்பட்ட பற்றாக்குறையான ஐ.அ.டொலர்கள் 205 மில்லியன்களுக்கு மாறாக 2005 இல் திரண்ட சென்மதிநிலுவை ஐ.அ.டொலர்கள் 501 மிகை ஒன்றைப் பதிவு செய்தது.

- **நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2001 இலிருந்து மூன்று தொடர்ச்சியான ஆண்டுகளாக அதிகரிப்பினைப் பதிவு செய்ததுடன் 2004 இல் வீழ்ச்சியடைந்து 2005 இல் மீண்டும் உயர்வடைந்தது.** முன்னேற்றகரமான ஒதுக்கு நிலமை வெளிநாட்டு அதிர்வுகளுக்கு நாட்டை தாக்குப்பிடிக்கச் செய்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2004 இன் முடிவில் 2,196 மில்லியன்களாகவிருந்து 2005 இன் முடிவில் ஐ.அ.டொலர்கள் 2,735 மில்லியன்களுக்கு அதிகரித்தது. பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான ஐ.அ.டொலர்கள் 157 மில்லியன் அளவு கொண்ட அவசர உதவிகள் உள்நாட்டு வர்த்தக வங்கிகளிலிருந்து திரட்டப்பட்ட ஐ.அ.டொலர்கள் 415 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு நாணயக் கடன்கள் பன்னாட்டு சந்தையிலிருந்து திரட்டப்பட்ட ஐ.அ.டொலர்கள் 100 மில்லியன் கொண்டதொரு கூட்டுக்கடன், ஐ.அ.டொலர்கள் 20 மில்லியன்களைக் கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து திரட்டப்பட்டதொரு நிகழ்ச்சித் திட்டக்கடன் மற்றும் பரிஸ் கழகத்தின் அங்கத்தவர்களாலும் பல்புடைக் கடன் வழங்கல் நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட கடன்களைக் காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்ட இசைவுத் தாமதம் மற்றும் சுனாமியுடன் தொடர்புடைய உட்பாய்ச்சல்கள் என்பன ஒதுக்கில் அதிகரிப்பை ஏற்படுத்தின. நாட்டிற்கான உயர்ந்தளவிலான அந்நியச் செலாவணி உட்பாய்ச்சல்கள் இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவினங்களை

**அட்டவணை 5.9**
2005 காலப்பகுதியில் வெளிநாட்டுக்கடனிடல் மூலமான பிரதான செயற்றிட்டக் கடன்

| கொடை வழங்குனர் | செயற்றிட்டம் | வழங்கப்பட்டதொகை ஐ.அ.டொலர் மில்லியனில் |
|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | **198.1** |
| இதில் | தனியார்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான நிதியியல் சந்தை | 19.8 |
| | வீதி வலையமைப்பு மேம்பாட்டுச் செயற்றிட்டம் | 16.7 |
| | வீதித்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 15.0 |
| | 3ஆவது நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்துறைச் செயற்றிட்டம் | 14.0 |
| | இரண்டாந்தரக்கல்வி நவீனப்படுத்தல் செயற்றிட்டம் | 13.4 |
| | கரையோர மூலவள முகாமைத்துவ செயற்றிட்டம் | 12.9 |
| | வலுத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 12.8 |
| | சி.ந.முயற்சி சிறப்பு செயற்றிட்ட கொடுகடன் உதவிச் செயற்றிடடம் | 11.7 |
| | தென்மாகாண போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் | 11.4 |
| | மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனரமைப்புச் செயற்றிட்டம் | 11.0 |
| **பன்னாட்டு அ பிவிருத்தி அமைப்பு** | | **113.1** |
| இதில் | கிராமியப் பொருளாதாரத்திற்கான புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்திச் செயற்றிட்டம் | 22.6 |
| | வடகிழக்கு வீடமைப்பு புனரமைப்பு செயற்றிட்டம் | 16.8 |
| | சுனாமி அவசரகால மீட்புச் செயற்றிட்டம் கட்டம் II | 14.2 |
| | இயைபுபடுத்தி தகைமைப்படுத்தல் - பட்டதாரி மாணவர் கல்வி செயற்றிட்டம் | 12.3 |
| | ஈ - இலங்கை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 10.3 |
| **யப்பானிய அரசாங்கம்** | | **198.5** |
| இதில் | இலங்கை சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீட்சி மற்றும் முன்னேற்றப்படுத்தல் செயற்றிட்டம் | 39.3 |
| | பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய அபிவிருத்திச் செயற்றிட்டம் | 35.3 |
| | சிறிய அளவு உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் | 21.0 |
| | கொழும்புப் பெரும்பாகத்திற்கான களுகங்கை நீர் வழங்கல் செயற்றிட்டம் | 18.1 |
| | சிறிய அளவு உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் செயற்றிட்டம் | 13.5 |
| | வளவைகங்கை இடது கரை நீர்ப்பாசன, விரிவாக்கச் செயற்றிட்டம் (11) | 10.0 |
| **வ/ப சிட்டிகுறூப் முதலீட்டு வங்கி** | | **100.0** |
| | வசதிப்படுத்தல் உடன்படிக்கை | 100.0 |
| **ஐரோப்பிய முதலீட்டு வங்கி** | | **17.9** |
| | தனியார்துறை உடன்கடன் வழங்கலுக்கான டிஎவ்சிசி தொடர் கொடுகடன் | 17.9 |

மூலங்கள் ; இலங்கை மத்திய வங்கி
வெளிநாட்டு மூலவளத் திணைக்களம்

**வரைபடம் 5.8**
காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள்




தணிப்பதற்கு உதவின. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கம் 2004 இன் இறுதியில் 3.3 மாதங்களுக்கான இறக்குமதியிலிருந்து 2005 இன் இறுதியில் 3.7 மாதங்களுக்கான இறக்குமதிக்கு முன்னேற்றமடைந்தது. குறுந்தவணைக் கடன் மற்றும் பொறுப்புக்களுக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்கீட்டு விகிதத்தினால் அளவிடப்படும் ஒதுக்குகளின் போதுமான தன்மையானது 2004 இறுதியிலிருந்த 83.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2005 இன் இறுதியில் 85.4 சதவீதத்திற்கு முன்னேற்றமடைந்தது. ஆயினும், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கடன்வழங்கல்கள் போன்ற வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக் கப்பட்ட உள்நாட்டுக் கடன்பாடுகள் உள்ளடக்கப்பட்டமையால், வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளினது கடன்களின் மீள் கொடுப்பனவுகளின் கணிசமான தொகை 2006 பகுதியிலேயே மேற கொள்ளப்படுவதன் காரணமாக இவ்விகிதம் 77.1 சதவீதத்திலிருந்து 71.6 சதவீதத் திற்கு குறை வடையும்.

- **2005 இல் நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர்கள் 4,200 மில்லியன்களுக்கு (5.7 மாதங்களுக்கான இறக்குமதிகள்) அதிகரித்தது.** இது 2004 இன் இறுதியில் ஐ.அ.டொலர்கள் 3,438 மில்லியன்களாக (5.2 மாதங்களுக்கான இறக்குமதிகள்) இருந்ததுடன் அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரித்தமையே இதற்கான ஒரே காரணமாகும்.

## 5.6 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் பணிகள்

### வெளிநாட்டுப் படுகடன்

- **மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அளவிடப்படும் நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர் நியதிகளில் 2005 ஆம் ஆண்டு காலத்தில் குறைவடைந்தமைக்கு பிரதான நாணயங்களுக்கெதிராக ரூபாவின் பெறுமதி அதிகரித்தமையும் . மற்றும் 2005 இல் வெளிநாட்டுக் கடன்வழங்கல் நிறுவனங்களினாலும் மற்றும் இருபுடை நன்கொடையாளர் ஆகியவற்றின் குறைந்தளவான கடன் பகிர்ந்தளிப்புக்கள் குறை வடைந்தமையுமே பிரதான காரணங்களாகும்.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக,

**அட்டவணை 5.10**
இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (அ)

| உடைமையாளர் | ஐ.அ.டொலர் மில்லியன்(ஆ) | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 |
| 1. அரசு | 78 | 46 | 55 | 95 | 131 | 7,302 | 4,424 | 5,320 | 9,897 | 13,417 |
| 2. அரச முகவர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| 3. மத்திய வங்கி (இ) | 1,260 | 1,654 | 2,274 | 2,101 | 2,604 | 117,365 | 160,018 | 219,984 | 219,795 | 265,873 |
| 4. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் | 1,338 | 1,700 | 2,329 | 2,196 | 2,735 | 124,668 | 164,442 | 225,304 | 229,693 | 279,290 |
| 5. வர்த்தக வங்கிகள் (ஈ) | 900 | 795 | 889 | 1,243 | 1,466 | 83,815 | 76,921 | 86,011 | 129,987 | 149,656 |
| 6. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | 2,238 | 2,495 | 3,218 | 3,438 | 4,201 | 208,482 | 241,364 | 311,315 | 359,680 | 428,946 |
| 7. மொத்த அலுவல்சார் சொத்துக்கள்- மாதத்தில் | | | | | | | | | | |
| 7.1 வணிக இறக்குமதிகள் | 2.7 | 3.3 | 4.2 | 3.3 | 3.7 | | | | | |
| 7.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 2.3 | 2.9 | 3.6 | 2.9 | 3.3 | | | | | |
| 8. மொத்தச் சொத்துக்கள் - மாதத்தில் | | | | | | | | | | |
| 8.1 வணிக இறக்குமதிகள் | 4.5 | 4.9 | 5.8 | 5.2 | 5.7 | | | | | |
| 8.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 3.8 | 4.2 | 5.0 | 4.5 | 5.0 | | | | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 2002இன் பின்னரான ஒதுக்கங்கள் சந்தைவிலையில் கணிக்கப்பட்டுள்ளன.
(ஆ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டன.

| ஆண்டு | | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 |
|---|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா (ஆண்டிறுதியில்) | 80.06 | 93.16 | 96.75 | 96.74 | 104.61 | 102.12 |

**வரைபடம் 5.9**
**வெளிநாட்டுப்படுகடன்**




மொத்த வெளிநாட்டுக் கடன்பாடு 2004 இன் 56.6 சதவீதமாகவிருந்து 2005 இல் 48.4 சதவீதமாகக் குறைவடைந்தது. ஐ.அ.டொலர் நியதிகளில், 2004 இல் ஐ.அ.டொலர்கள் 11,346 மில்லியன்களாக இருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 11,368 மில்லியன்களுக்குக் குறைந்தளவில் அதிகரித்தது. ஆயினும், விரிந்த கூட்டுத் தொகையாக மொத்த வெளிநாட்டுக் கடன்களும் பொறுப்புக்களும் ஐ.அ.டொலர்கள் 13,034 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 2.0 சதவீதத்தினால் அதிகரித்து வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மொத்த வெளிநாட்டுப் படு கடன்களில் ஏறத்தாழ 30 சதவீதம் யப்பானிய யென் மற்றும் ஏறத்தாழ 42 சதவீதம் சிறப்பு எடுப்பனவு உரிமையிலும் குறித்துரைக் கப்பட்டிருந்ததுடன் இவை 2005 இல் ஐ.அ.டொலருக்கு எதிராக முறையே 12.8 சதவீதத்தினாலும், 8.0 சதவீதத்தினாலும் பெறுமானத் தேய்வடைந்திருந்தது. வெளிநாட்டுக் கடனின் வீழ்ச்சிக்கு இது பங்களிப்புச் செய்தது. 2005 இல் சுனாமி நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புக்கு உதவுவதற்காக இத்தாலி மற்றும் சீனா ஆகியவற்றால் முறையே ஐ.அ.டொலர்கள் 9.2 மில்லியன் மற்றம் ஐ.அ.டொலர்கள் 4.4 மில்லியன் தொகை கொண்ட கடன் பதிவழிக்கப்பட்டமை, என்பனவும் வெளிநாட்டுக் கடன்களின் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

- **2005 இல் நாட்டின் நடுத்தர மற்றும் நீண்ட கால படுகடன், மொத்த வெளிநாட்டுக் கடன் இருப்பில் ஏறத்தாழ 94 சதவீதத்திற்கு வகை கூறியது.** 87.5 சதவீதம் கூடுதலானவை அரசாங்கக் கடன்களை உள்ளடக்கியதாகவும், மிகுதி 12.5 சதவீதம் தனியார்துறைக் கடன்பாடுகள் அரச கூட்டுத் தாபனங்களின் வெளிநாட்டுப்படு கடன் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான படுகடன் கடப்பாடுகள் என்பனவற்றைக் கொண்டிருந்தன. தேறிய நேர்க்கணிய கடன்பாடுகளின் மத்தியிலும், சிறப்பு எடுப்பனவு உரிமை மற்றும் யென் என்பன வற்றிற்கெதிராக ஐ.அ.டொலர் பெறுமதி அதிகரித்தமையின் காரணமாக அரசாங்க சலுகைப் படுகடன் இருப்பு 2004 இல் ஐ.அ.டொலர்கள் 9,283 இலிருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 9,000 மில்லியன்களுக்கு 3.1 சதவீதத்தினால் அதிகரித்தது. சந்தை வட்டி வீதத்தில் ஐ.அ.டொலர்கள் 100 மில்லியன் கொண்ட கூட்டுக் கடன்கள் பெறப் பட்டதன் காரணமாக அரசங்கத்தின் சலுகையற்ற படுகடன்கள் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 368 மில்லியன்களுக்கு 53.2 சதவீதத்தினால் அதிகரித்தன. சுனாமி பேரழிவின் பின்விளைவு காரணமாக ஐ.அ.டொலர்கள் 150 மில்லியன் அவசர உதவியாகப் பெறப்பட்டதன் காரணமாக பன்னாட்டு நாணய நிதியத்திற்கான பொறுப்புக்கள் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 258 மில்லியனிலிருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 381 மில்லியன்களுக்கு 47.6 சதவீதத்தினால் அதிகரித்தன.

- **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட கடனின் முக்கிய காரணமாக தனியார்துறை மற்றும் அரசகூட்டுத்தாபனம் என்பவற்றிற்கான கடன் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 918 மில்லியன்களில் இருந்து 2005 இல் ஐ.அ.டொலாகள் 955 மில்லியன்களுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்தது.** இந்தியக் கொடுகடன் வசதியின் கீழ் ஐ.அ.டொலர்கள் 144 மில்லியன் தொகையான கடன் வசதிகள் பயன்படுத்தப் பட்டமையின் காரணமாக அரசாங்க உத்தரவாதத்துடனான தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிற்கான வெளிநாட்டுக் கடன் இருப்பு 2004 இல் ஐ.அ.டொலர்கள் 507 மில்லியன்களிலிருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 567 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 11.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எதிர்பாராப் பொறுப்புக்களைக் குறைக்கும் அரசாங்கத்தின் கொள்கை காரணமாக அரச கூட்டுத்தாபனங்களுக்கும் தனியார் துறைக்கும் உத்தரவாதம் வழங்குவதில் அரசாங்கம் எச்சரிக்கையுடன் இருந்தபோதிலும், 2005 காலப்பகுதியில் நாட்டின் சென்மதிநிலுவை மீது வரலாற்றினையே மிகக் கூடுதலான எண்ணெய்

*சிறப்புக் குறிப்பு - 11*

## சென்மதி நிலுவையின் நிதிக்கணக்கின் பிரசுரத்தின் மறு வகைப்படுத்தல்

பொருளாதார ஆய்வையும் நாடுகளிடையே ஒப்பீட்டையும் வசதிப்படுத்துவதற்காக சென்மதி நிலுவை புள்ளி விபரங்கள் சேகரிப்பும் வெளியீடும் சர்வதேச நாணய நிதியத்தினால் குறித்துரைக்கப்பட்ட சர்வதேச நியமங்களுக்கேற்ப மேற கொள்ளப்படுகின்றன. இந்நியமங்கள் சர்வதேச நாணய நிதியத்தினால் பிரசுரிக்கப்படும் சென்மதி நிலுவை கையேட்டில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. நிதியியல் சந்தைகளிலேற்பட்ட துரிதமான அபிவிருத்திகள் மற்றும் நுட்பங்கள் என்பன பண்டங்களுக்கான சர்வதேச வர்த்தகத்திலேற்பட்ட மாற்றங்கள் சேவைகளின் வர்த்தகத்திலேற்பட்ட வளர்ச்சி என்பவற்றைக் கவனத்திற் கொண்டு சென்மதி நிலுவை

### அட்டவணை சி 11.1 : நிதிக்கணக்கிலுள்ள பிரதான பதிவுகளின் ஒதுக்கம் பீபீஎம் 4 முறையிலான பிரசுரத்திலிருந்து பீபீஎம் 5 முறையான பிரசுரத்திற்கு)

| பீ பீ எம் 4 முறையிலான பிரசுரம் | பீ பீ எம் 5 பிரசுரம் |
|---|---|
| **தனியார் முதலீடு** | **நேரடி முதலீடு** |
| நீண்டகாலம் | இலங்கையின் நேரடி முதலீடு |
| நேரடி முதலீடு | பங்கு மூலதனம் |
| வரவு | தனியார் மயப்படுத்தல் பெறுகைகள் |
| பற்று | வெளிநாட்டில் நேரடி முதலீடு |
| தனியார்மயப்படுத்தல் பெறுகை | |
| பிற தனியர் - நீண்டகாலம் | **பட்டியல் முதலீடு** |
| | சொத்துக்கள் |
| **குறுங்காலம்** | பங்கு முதலீடுகள் |
| பட்டியல் முதலீடு | பொறுப்புக்கள் |
| பிற தனியார் குறுங்காலம் | பங்கு முதலீடுகள் |
| வர்த்தக வங்கி - சொத்துக்கள் | |
| வர்த்தக வங்கி - பொறுப்புக்கள் | **பிற முதலீடு** |
| | சொத்துக்கள் |
| **மத்திய அரசாங்கம்** | வர்த்தக வங்கி சொத்துக்கள் |
| நீண்டகாலம் | பொறுப்புக்கள் |
| பிற நீண்டகாலம் | தனியார் துறை |
| குறுங்காலம் | குறுங்காலம் |
| | மத்தியவங்கி - பொறுப்புக்கள் |
| **நாணயத் துறை** | வர்த்தக வங்கி பொறுப்புக்கள் |
| மத்திய அரசு ர பொறுப்பு | சர்வதேச நாணய நிதியத்துடனான |
| சர்வதேச நாணய நிதியத்துடனான | கொடுக்கல் வாங்கல்கள் |
| கொடுக்கல் வாங்கல்கள் | (நிதிய கடன்களைப் பயன்படுத்தி) |
| | மத்திய அரசாங்கம் |
| | நீண்டகாலம் |
| | பிற நீண்டகாலம் |
| | குறுங்காலம் |
| | தனியார் துறை |
| | நீணட்டகால கடன்கள் |
| | |
| | **ஒதுக்க சொத்துக்கள்** |
| மத்திய வங்கி - சொத்துக்கள் | மத்திய வங்கி சொத்துக்கள் |
| அரசாங்கம் ர சொத்துக்கள் | அரசாங்க சொத்துக்கள் |
| விசேட எடுப்பனவு உரிமை | சிறப்பு எடுப்பனவு உரிமை |
| நாணய தங்கம் | நாணய தங்கம் |
| | |
| தேறிய பிழைகளும் தவறுகளும் | தேறிய பிழைகளும் தவறுகளும் |
| | |
| ஒட்டுமொத்த மீதி | **ஒட்டுமொத்த மீதி** |

**சிறப்புக் குறிப்பு தொடர்ச்சி**

கையேட்டின் 5 வது பதிப்பு 1993ல் பிரசுரிக்கப்பட்டது. இலங்கையில் வர்த்தகம், சேவைகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல் கணக்குகள் பெரிதும் இக்கையேட்டிற்கேற்ப காணப்பட்டாலும் நிதிக் கணக்கு முற்றிலும் ஒத்திசைவானதாகக் காணப்படவில்லை. எனவே, 2005 இல் நிதிக் கணக்கானது சென்மதி நிலுவை கையேட்டின் 5ம் பதிப்புக்கியைபாக தரமுயர்த்தப்பட்டு ஆண்டறிக்கையின் 86அ அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சென்மதி நிலுவை கையேட்டின் 4ம் பதிப்பு மற்றும் 5ம் பதிப்பு ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசங்கள் 1977 இல் சென்மதி நிலுவைக் கையேட்டின் 4ம் பதிப்பு பிரசுரிக்கப்பட்டதிலிருந்து சர்வதேச நிதியியல் கொடுக்கல் வாங்கல்களின் இயல்பிலும் உள்ளமைப்பிலும் கொடுக்கல் வாங்கல்களின் விரிவான மாற்றங்களைப் பிரதிபலிக்கும் நிதியியல் பாய்ச்சல்களின் உள்ளடக்கம் குறிப்பிடத் தக்களவில் விரிவடைந்தும் மறுசீரமைக்கப்பட்டும் உள்ளது.

அதற்கேற்ப 5ம் கையேட்டின் கீழ் நிதி கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் நான்கு பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை நேரடி முதலீடு, பட்டியல் முதலீடு, பிற முதலீடு மறறும் ஒதுக்க சொத்துக்கள் என்பனவாகும். நேரடி முதலீடானது குறிப்பிட்ட நாட்டின் நேரடி முதலீடு மற்றும் வெளிநாட்டிலான முதலீடு என இரண்டாக பிரிக்கப்படும் அதேவேளை பட்டியல் மற்றும் பிற முதலீடுகள் சொத்துக்கள், மற்றும் பொறுப்புக்கள் என்ற அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. சென்மதி நிலுவையின் 5ம் கையேட்டின்படி ஒதுக்க சொத்துக்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்களில் அடிப்படையில் மாத்திரம் பதிவு செய்யப்படுகின்றன.

விலை உயர்வின் மோசமான தாக்கத்தைக் தணிப்பதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஐ.அ.டொலர்கள் 144 மில்லியன் கடனுக்கு அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்டது. ஆயினும், 2005 இல் தனியார்துறையினது வெளிநாட்டுக் கடன்களின் மீள் கொடுப்பனவு உள்பாய்ச்சலைவிட உயர்வாக இருந்தமையினால் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றம் தனியார் துறை நிறுவனங்கள் என்பனவற்றிற்கான அரசாங்க உத்தரவாதமில்லாத நீண்ட காலக் கடன்கள் 2004 இன் ஐ.அ.டொலர்கள் 411 மில்லியன்களிலிருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 388 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 5.6 சதவீதத்தினால் குறைவடைந்தன.

- **வர்த்தகக் கொடுகடன்களை உள்ளடக்கிய நாட்டின் குறுங்கால கடன் இருப்பானது, ஏற்றுமதிகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளின் வளர்ச்சி உயர்வாக இருந்ததன் காரணமாக ஐ.அ.டொலர்கள் 664 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 2.6 சதவீதத்தினால் அதிகரித்தது.** மொத்தப் படுகடன் இருப்பில் குறுங்காலப் படுகடன் இருப்பு 2004 இன் 5.7 சதவீதத்திலிருந்து 2005 இல் 5.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்களில் ஒரு கூர்மையான அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக வங்கித்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2005 இன் இறுதியளவில் ஐ.அ.டொலர்கள் 1,666 மில்லியன்களுக்கு 16.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

- **மேற்கூறிய அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக, மொத்த வெளிநாட்டுப் படுகடனும் வங்கித்தொழில்துறைப் பொறுப்புக்களும் 2004 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 63.7 சதவீதமாக இருந்து 2005 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 55.4 சதவீதமாக குறைவடைந்துள்ளது.** ஆயினும், மொத்த வெளிநாட்டுப் படுகடனும் வங்கித் தொழில் துறை பொறுப்புக்களும் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 12,775 ஆக இருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 13,034 மில்லியனுக்கு 2.0 சதவீதத்தினால் அதிகித்துள்ளன. வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட ஓர் கூரிய அதிகரிப்பே இதற்கான முக்கிய காாரணமாகும்.

## வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

- **2005 இல் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுப் பணிக்கான நாட்டின் இயலளவு குறிப்பிடத் தக்களவில் முன்னேற்றமடைந்துள்ளது.** பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் பெறுகைகளிலிருந்தான ஓர் விகிதாசாரமாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2004 இல் 11.6 சதவீதமாக இருந்து

**அட்டவணை 5.11**

**வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் வங்கித் தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 |
| **1. நடுத்தர நீண்டகாலப் படுகடன்** | 7,839 | 8,732 | 10,116 | 10,699 | 10,704 | 730,245 | 844,709 | 978,556 | 1,119,155 | 1,093,057 |
| *1.1 அரசு* | 6,808 | 7,464 | 8,812 | 9,523 | 9,368 | 634,255 | 721,956 | 852,433 | 996,203 | 956,620 |
| *1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும்* | 572 | 689 | 602 | 507 | 567 | 53,324 | 66,663 | 58,251 | 52,986 | 57,912 |
| *1.3 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும்* | 249 | 293 | 334 | 411 | 388 | 23,203 | 28,393 | 32,319 | 42,944 | 39,588 |
| *1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள்* | 209 | 287 | 368 | 258 | 381 | 19,463 | 27,787 | 35,552 | 27,023 | 38,937 |
| **2. குறுங்காலக் கடன்** | 533 | 601 | 620 | 647 | 664 | 49,648 | 58,116 | 59,935 | 67,726 | 67,759 |
| *2.1 அரசு* | - | - | - | - | - | - | - | - | - | - |
| *2.2 ஏனையவை (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஏனைய வர்த்தககொடுகடன்களும்(இ) (ஆ)* | 533 | 601 | 620 | 647 | 664 | 49,648 | 58,116 | 59,935 | 67,726 | 67,759 |
| **3. வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (இ)** | 1,119 | 1,001 | 1,046 | 1,429 | 1,666 | 104,201 | 96,807 | 101,149 | 149,492 | 170,170 |
| *3.1 மத்திய வங்கி* | 2 | 1 | 0 | 1 | 1 | 172 | 123 | 32 | 128 | 131 |
| *3.2 வர்த்தக வங்கிகள்* | 1,009 | 865 | 863 | 1,066 | 1,388 | 94,030 | 83,655 | 83,514 | 111,464 | 141,753 |
| *3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள்* | 107 | 135 | 182 | 362 | 277 | 9,999 | 13,029 | 17,604 | 37,899 | 28,286 |
| **4. மொத்த வெளிநாட்டுப்படுகடன்(1+2)** | 8,372 | 9,333 | 10,735 | 11,346 | 11,368 | 779,893 | 902,825 | 1,038,491 | 1,186,881 | 1,160,816 |
| **5. மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் (1+2+3)** | 9,490 | 10,334 | 11,781 | 12,775 | 13,034 | 884,095 | 999,632 | 1,139,640 | 1,336,373 | 1,330,986 |
| **ஒப்பந்தக் குறிப்பு விடயங்கள்** | | | | | | | | | | |
| **நடுத்தர நீண்டகாலப்படுகடன்** | | | | | | | | | | |
| (1) செயற்றிட்டக் கடன்கள் | 5,374 | 4,358 | 6,961 | 7,702 | 7,519 | 480,237 | 421,637 | 673,432 | 805,646 | 768,643 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,154 | 3,048 | 1,726 | 1,763 | 942 | 103,163 | 294,880 | 167,007 | 184,467 | 164,857 |
| (3) நிரம்பலர் கொடுகடன் | 316 | 100 | 218 | 240 | 368 | 29,411 | 9,718 | 21,048 | 25,123 | 37,591 |
| (4) ப.நா.நி. எடுப்பனவுகள் | 209 | 287 | 368 | 258 | 381 | 19,463 | 27,787 | 35,552 | 27,023 | 38,937 |
| (5) ஏனைய கடன்கள் (ஈ) | 786 | 939 | 843 | 735 | 1,494 | 97,971 | 90,686 | 81,516 | 76,896 | 83,029 |
| **குறுகியகாலப் படுகடனும் வங்கித் துறைப் பொறுப்புக்களும்** | 1,651 | 1,602 | 1,665 | 2,077 | 2,330 | 153,850 | 154,923 | 161,084 | 217,217 | 237,929 |
| **மொ.உ. உ. வின் சதவீதமாக** | | | | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 53.2 | 56.3 | 58.9 | 56.6 | 48.4 | 55.4 | 57.0 | 59.0 | 58.5 | 49.2 |
| மொத்த வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 7.1 | 6.0 | 5.7 | 7.1 | 7.1 | 7.4 | 6.1 | 5.7 | 7.4 | 7.2 |
| மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் | 60.3 | 62.4 | 64.6 | 63.7 | 55.5 | 62.8 | 63.1 | 64.7 | 65.9 | 56.3 |
| குறுங்காலப் படுகடன் | 3.4 | 3.6 | 3.4 | 3.2 | 2.8 | 3.5 | 3.7 | 3.4 | 3.3 | 2.9 |
| குறுங்காலப்படுகடன் வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 10.5 | 9.7 | 9.1 | 10.4 | 9.9 | 10.9 | 9.8 | 9.2 | 10.7 | 10.1 |
| மொத்தப் படுகடனினதும் பொறுப்புக்களினதும் சதவீதமாக | | | | | | | | | | |
| குறுங்காலப்படுகடன் | 5.6 | 5.8 | 5.3 | 5.1 | 5.1 | 5.6 | 5.8 | 5.3 | 5.1 | 5.1 |
| குறுங்காலப் பொறுப்புக்கள் | 11.8 | 9.7 | 8.9 | 11.2 | 12.8 | 11.8 | 9.7 | 8.9 | 11.2 | 12.8 |
| அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக குறுங்காலப்படுகடன் | 39.8 | 35.3 | 26.6 | 29.5 | 24.3 | 39.8 | 35.3 | 26.6 | 29.5 | 24.3 |

*மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி,வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.*

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்டகொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது.
(இ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பற்றுக்களும் அந்நியச் செலாவணி வங்கிக்கூறுகள் உள்ளடங்கிய வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள்
(ஈ) பொதுக் கூட்டுத்தாபனங்களினதும் தனியார் துறை நிறுவனங்களினதும் நீண்ட காலக் கடன்களை உள்ளடக்கியது.

**அட்டவணை 5.12**
வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002 | 2003 | 2004 | 2005(அ) | 2001 | 2002 | 2003 | 2004 | 2005(அ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 813 | 788 | 761 | 843 | 623 | 72,584 | 74,704 | 73,125 | 85,275 | 62,577 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 558 | 572 | 526 | 594 | 419 | 49,883 | 54,006 | 50,502 | 59,990 | 42,075 |
| (i) ப.நா. நிதியத்திற்கு | 78 | 56 | 32 | 107 | 39 | 6,966 | 4,647 | 2,869 | 10,718 | 3,902 |
| (ii) ஏனையவற்றிற்கு | 480 | 516 | 493 | 487 | 380 | 42,918 | 49,359 | 47,632 | 49,272 | 38,173 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 254 | 216 | 235 | 249 | 204 | 22,701 | 20,698 | 22,623 | 25,328 | 20,502 |
| (i) ப.நா. நிதியத்திற்கு | 4 | 4 | 4 | 10 | 10 | 348 | 398 | 414 | 988 | 973 |
| (ii) ஏனையவற்றிற்கு | 251 | 212 | 230 | 240 | 194 | 22,353 | 20,300 | 22,209 | 24,330 | 19,530 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் | 6,172 | 5,967 | 6,544 | 7,284 | 7,887 | 551,309 | 571,195 | 631,549 | 738,714 | 793,153 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 7,436 | 7,330 | 8,127 | 9,004 | 9,891 | 664,073 | 701,579 | 784,408 | 912,817 | 994,751 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 13.2 | 13.2 | 11.6 | 11.6 | 7.9 | 13.2 | 13.1 | 11.6 | 11.5 | 7.9 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 11.8 | 12.2 | 11.1 | 10.0 | 7.3 | 11.8 | 12.2 | 11.1 | 10.0 | 7.3 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 10.9 | 10.8 | 9.4 | 9.4 | 6.3 | 10.9 | 10.6 | 9.3 | 9.3 | 6.3 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல வாங்கல் நீங்கலாக | 9.8 | 9.9 | 8.9 | 8.1 | 5.8 | 9.8 | 9.9 | 8.9 | 8.1 | 5.8 |
| 5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவு | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவு (இ) | 450 | 522 | 502 | 484 | 268 | 40,190 | 49,928 | 48,452 | 33,590 | 26,927 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 55.3 | 66.2 | 66.0 | 57.4 | 43.0 | 55.4 | 66.8 | 66.3 | 57.4 | 43.0 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) ரூபாய் பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.
(இ) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

7.9 சதவீதத்திற்கு முன்னேற்றமடைந்துள்ளது. பன்னாட்டு நாணய நிதியத்திற்கான மீள்கொடுப்பனவுகள் நீக்கப்படுமிடத்து, படுகடன் பணி விகிதம் மேலும் 7.3 சதவீதத்திற்கு முன்னேற்றமடையும். பண்டங்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் ஏற்பட்ட முன்னேற்றம் தெரிவு செய்யப்பட்ட அரச கடன்களின் முதல் வட்டி மீதான கொடுப்பனவுகளை காலம்தாழ்த்தி செலுத்துவதற்கான சட்ட இசைவுத் தாமதம் மற்றும் பாதுகாப்புக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன இச்சாதகமான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தன. தனியார் பணஅனுப்புதல்களின் பெறுகைகளும் உள்ளடக்கப்பட்டிருப்பின் இவ்விகிதா சாரம் ஏறத்தாழ 6.3 சதவீதத்திற்கு கணிசமானளவு முன்னேற்றமடைந்திருக்கும்.

- **அனைத்து வெளிநாட்டுப் படுகடன் மீதான கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்த படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2005 இல் ஐ.அ.டொலர்களள் 623 மில்லியனுக்கு 26.1 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.** பாரிஸ் கழகத்தின் உறுப்பினர்கள் குழு 8 நாடுகள் மற்றும் பல்புடைக் கடன்வழங்கும் நிறுவனங்கள், என்பனவற்றினால் வழங்கப்பட்ட கடன்களைக் காலம் தாழ்த்திச் செலுத்துதல், பாதுகாப்பு கடன்களுக்கான மீள்கொடுப்பனவுகளின் வீழ்ச்சி மற்றும் யென் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமை என்பனவற்றிற்கெதிரான ஐ.அ.டொலரின் பெறுமான உயர்வு என்பன 2005 இல் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளில் சாதகமான தொரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மொத்தப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளில் 67 சதவீதத்திற்கு வகை கூறும் கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர்கள் 419

மில்லியன்களுக்கு 29.5 சதவீதத்தினால் குறைவடைந்தவேளையில் வட்டிக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர்கள் 204 மில்லியன்களுக்கு 18.1 சதவீதத்தினால் குறைவடைந்தன. 2005 இல் அரசாங்கப்படுகடனுடன் தொடர்பான கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர்கள் 268 மில்லியனுக்கு 44.6 சதவீதத்தினால் குறைவடைந்தன. 2004 இல் பன்னாட்டு நாணய நிதியக் கடன்களின் குறிப்பிடத்தக்கதொரு கடன் தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டமை மற்றும் சுனாமியுடன் தொடர்பான உதவிகளாக பன்னாட்டு நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட கடன் மீள்கொடுப்பனவுகள் பிற்போட்டமை என்பன காரணமாக 2005 காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர்கள் 39 மில்லியன்களுக்கு 63.6 சதவீதத்தினால் குறைவடைந்தன. சர்வதேச சந்தையில் ஐ.அ.டொலரின் பெறுமதி அதிகரித்ததன் விளைவாக யப்பானிய யென் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட படுகடன்களின் மீள்கொடுப்பனவுகள் முறையே 12.8 சதவீதம் மற்றும் 8.0 சதவீதம் என்பவற்றால் குறைவடைந்தது.

## 5.7 செலாவணி வீத அமைப்பும் செலாவணிவீத அசைவுகளும்

- **2005 இல் சுதந்திரமாக மிதிக்கவிடப்பட்ட செலாவணிவீத அமைப்பு சிறப்பாக செயற்பட்டது.** 2004 முழுவதும் செலாவணி வீதத்தில் காணப்பட்ட பெறுமானம் தேய்வடைந்த போக்கு சுனாமி பேரழிவைத் தொடர்ந்து மாற்றமடைந்து காணப்பட்டது. 2004 திசெம்பர் 17 இல் ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா 105.47 ஆக இருந்த செலாவணி வீதம் 2004 திசெம்பர் 31 இல் ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா 104.61 ஆக பெறுமானம் உயர்வடைந்தது. இது 2005 சனவரி 12 அளவில் மேலும் ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா 98.11 ஆக பெறுமான வளர்ச்சியடைந்து அதன் பின்னர் மெதுவாக பெறுமானத்தேய்வினை எய்தியது. ஆண்டினை முழுவதுமாகப் பார்க்கையில் ரூபாவானது ஐ.அ.டொலர் ஒன்றுக்கு 102.12 ரூபாவாக 2.4 சதவீதத்தினால் உயர்வடைந்தது. சுனாமியின் பின்விளைவாக கணிசமானளவு வெளிநாட்டு உதவிகளுக்கு இருபுடை மற்றும் பல்புடை நன்கொடையாளர்களினால் உறுதியளிக்கப்பட்டமை வெளிநாட்டுப் பண அனுப்புதல்கள் உற்பட மேலும் உட்பாய்ச்சல்கள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு என்பன சந்தையின் நம்பிக்கைத் தன்மைக்கு இட்டுச்சென்றது. முன்னேற்றமடைந்த திரண்ட சென்மதிநிலுவை மிகை செலாவணி வீத உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தியது.

- **2005 காலப்பகுதியில் முக்கிய நாணயங்களுக் கெதிராக ஐ.அ.டொலர் உயர்வடைந்தமையினால் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வீதமொன்றினால் இலங்கை ரூபாவின் பெறுமானமும் இப்பிரதான நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்தது.** பன்னாட்டுச் சந்தையில் ஐ.அ.டொலருக்கெதிராக ஏனைய பிரதான நாணயங்களின் அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், ரூபாவானது யூரோ (17.7 சதவீதம்), இசுடேர்லிங் பவுண் (14.5 சதவீதம்), இந்திய ரூபா (5.7 சதவீதம்), யப்பானிய யென் (17.5 சதவீதம்) மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமை (11.3 சதவீதம்) என்பனவற்றிற்கு எதிராக குறிப்பிடத்தக்களவில் உயர் வடைந்தது.

### பெயரளவு மற்றும் உண்மைப் பயன்தரு செலாவணி வீதங்கள்

- **பெறுமானத் தேய்வடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக 2005 காலப்பகுதியில் பெயரளவு மற்றும் உண்மைப் பயன்தரு செலாவணி வீதம் ஆகிய இரண்டும் பெறுமான வளர்ச்சியடைந்தன.** பிரதான நாணயங்களுக்கெதிராக ஒப்பீட்டு ரீதியில் இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட உயர்வின் விளைவாக வளர்ச்சி 5 நாணயக்கூடைகளை அடிப்படையாகக் கொண்ட (ஐ.அ.டொலர், யப்பானிய யென், இசுடேர்லிங் பவுண், இந்திய ரூபா மற்றும் யூரோ ஆகியவற்றை உள்ளடக்கியது) இலங்கை ரூபாவின் பெயரளவு பயன்தரு செலாவணிவீதம் 8.5 சதவீதத்திற்கு மேலான பெறுமான வளர்ச்சியை எய்தியவேளையில் 24 வர்த்தக பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களை பங்காளர்களாகக் கொண்ட பெயரளவு செலாவணி வீதத்தை அடிப்படையாகக் கொண்ட பெயரளவு பயன்தரு செலாவணி வீதம் 2004 இன் ஏறத்தாழ 11.0 சதவீத பெறுமானத் தேய்வுடன் ஒப்பிடுகையில் 2005 இல் 7.7 சதவீதம் கொண்ட பெறுமான வளர்ச்சியை அடைந்தது. இலங்கை ரூபாவின் உயர்ந்தளவான பெயரளவுப் பெறுமான வளர்ச்சி, வர்த்தக பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியான உயர்ந்தளவான உள்நாட்டு பணவீக்கம் என்பவற்றின் விளைவாக,

**அட்டவணை 5.13**
**செலாவணி வீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு இறுதி வீதங்கள் | | | ஆண்டுச் சராசரி | | | புள்ளிக்குப் புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
| | 2003 | 2004 | 2005 | 2003 | 2004 | 2005 | 2004 | 2005 | 2004 | 2005 |
| யூரோ | 121.60 | 142.32 | 120.96 | 109.16 | 125.79 | 125.10 | -14.56 | 17.66 | -13.22 | 0.55 |
| இந்திய ரூபாய் | 2.12 | 2.40 | 2.27 | 2.07 | 2.23 | 2.28 | -11.46 | 5.67 | -7.18 | -2.22 |
| யப்பானிய யென் | 0.90 | 1.02 | 0.87 | 0.83 | 0.94 | 0.91 | -11.15 | 17.53 | -10.90 | 2.33 |
| பவுண் இசுடேர்லிங் | 172.20 | 201.37 | 175.94 | 157.71 | 185.35 | 182.87 | -14.49 | 14.45 | -14.91 | 1.35 |
| ஐ.அ.டொலர் | 96.74 | 104.60 | 102.12 | 96.52 | 101.19 | 100.50 | -7.52 | 2.44 | -4.61 | 0.69 |
| சிஎஉ | 143.75 | 161.60 | 145.95 | 135.23 | 149.88 | 148.45 | -11.05 | 11.30 | -9.78 | 0.96 |

| தாக்கமுள்ள செலாவணிவீதச் சுட்டெண் (ஆ) | மாதாந்தச் சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி | | | முன்னைய ஆண்டினைவிட சத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | புள்ளிக்குப் புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
| | 2003திசெ. | 2004திசெ | 2005திசெ | 2003 | 2004 | 2005 | 2004 | 2005 | 2004 | 2005 |
| உ.தா.செ.வீ (1999=100) | 71.58 | 63.18 | 68.07 | 73.84 | 67.63 | 67.55 | -11.74 | 7.74 | -8.41 | -0.12 |
| பெ.தா.செ.வீ (1999=100) | 96.75 | 94.93 | 106.99 | 97.25 | 93.61 | 101.92 | -1.88 | 12.70 | -3.74 | 8.88 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

(ஆ) பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்களின் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கின்ற விதத்தில் நிறைகள் இருபுடை வர்த்தகப் பங்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிக்கப்படுகிறது. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

5 நாணயக்கூடைகள் தொடர்பான உண்மைப் பயன்தரு செலாவணிவீதம் 2005 இல் குறிப்பிடத்தக்களவில் 13.1 சதவீதத்தினால் பெறுமான உயர்வடைந்தது. இது 2002 இலிருந்து உண்மைப் பயன்தரு செலாவணி வீதத்தில் காணப்பட்ட பெறுமானத் தேய்வடையும் போக்கிற்கு மாறானதாகும். உண்மைப் பயன்தரு செலாவணி வீதமானது 2002 இல் 0.1

**வரைபடம் 5.10**
**செலாவணி வீத அசைவுகள்**

**2004 மற்றும் 2005 இலான செலாவணி வீத அசைவுகள் ஐ.அ.டொலரொன்றுக்கு ரூபா**




**பயன்தரு செலாவணி வீதச் சுட்டெண்கள்**
**24 - நாணயங்கள் (1999=100)**



**வரைபடம் 5.11**
**வங்கிகளுக்கிடையேயான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள்**
**2003–2005**




*சதவீதத்தினாலும், 2003 இல் 2.8 சதவீதத்தினாலும் மற்றும் 2004 இல் 0.7 சதவீதத்தினாலும் பெறுமதியில் தேய்வடைந்தது. அதேவேளை 24 நாணயக்கூடையின் உண்மைப் பயன்தரு செலாவணிவீதம் 2003 மற்றும் 2004 தொடர்பாக முறையே 3.4 சதவீதத்தினாலும், 1.1 சதவீதத்தினாலும் பெறுமானத் தேய்வடைந்ததுடன் 2005 இல் 12.7 சதவீதத்தினால் பெறுமான வளர்ச்சியடைந்தது. 2005 காலப்பகுதியில் செலாவணிவீத அசைவுகளின் ஊடான இலங்கையின் வெளிநாட்டு போட்டித் தன்மையில் ஏற்பட்ட தேய்வு குறிப்பாக ஆடைகள் துறையில் ஏற்பட்ட உற்பத்தியாக்க செயற்றிறன் முன்னேற்றங்களால் பெரும்பாலும் எதிரீடு செய்யப்பட்டது.*

## உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

- **வர்த்தகத்தின் விரிவாக்கம் மற்றும் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட உறுதிப்பாடு என்பவற்றின் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை விரிவாக்கப்பட்டு ஆழமாக்கப்பட்டது.** *முன்னோக்கிய சந்தை நடவடிக்கைகளினதும் வங்கிகளுக்கிடையிலான உடன் சந்தை நடவடிக்கைகளினதும் இணைந்த தொகை 2004 இன் ஐ.அ.டொலர்கள் 4,330 பில்லியன்களிலிருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 7,807 மில்லியன் டொலர்களுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. உடன் சந்தையின் அளவு 2004 இன் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர்கள் 3,304 மில்லியனிலிருந்து 2005 இல் ஐ.அ.டொலர்கள் 5,949 மில்லியன்களுக்கு அதிகரித்த வேளையில் முன்னோக்கிய அளவு 2004 இல் ஐ.அ.டொலர்கள் 1,026 மில்லியனிலிருந்து (மொத்த கொடுக்கல்வாங்கல்களில் 23.7 சதவீதம்) ஐ.அ.டொலர்கள் 1,858 மில்லியனுக்கு (மொத்த கொடுக்கல் வாங்கல்களில் 23.8 சதவீதம்) அதிகரித்தது. உடன் வீதத்தின் சதவீதமாக ஆண்டுக்கான முன்னோக்கிய வட்டம் இலங்கை ரூபா உயர்வடையும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக ஆண்டின் தொடக்கத்தில் குறைவடைந்தது. அதன் பின்னர், இது, ரூபாவின் பெறுமானம் படிப்படியாக தேய்வடைந்தமை மற்றும் உயர்ந்தளவிலான உள்நாட்டு வட்டி வீதங்கள் என்பவற்றினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் படிப்படியாக அதிகரித்தது.*

- **2005 காலப்பகுதியில் அந்நியச் செலாவணி சந்தையின் இருபக்கத்திலும் மத்திய வங்கி தலையீடு செய்து,** *2004 இன் ஐ.அ.டொலர் 515 மில்லியன் கொண்ட தேறிய விற்பனையுடன் ஒப்பிடுகையில ஐ.அ.டொலர் 464 மில்லியன்களைவிற்பனை செய்து ஐ.அ.டொலர் 290 மில்லியனை வாங்கியதன் மூலம் ஐ.அ.டொலர் 174 மில்லியன் கொண்ட குறைந்த தேறிய விற்பனைகளை விளைவித்தது.*